## அல்லாஹ்வின் கட்டளை

يَآيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْٓا اِذَا قُمْتُمْ اِلَى الصَّلٰوةِ فَاغْسِلُوْا وُجُوْهَكُمْ وَاَيْدِيَكُمْ اِلَى الْمَرَافِقِ وَامْسَحُوْا بِرُءُوْسِكُمْ وَاَرْجُلَكُمْ اِلَى الْكَعْبَيْنِ

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் தொழுகைக்காக எழுந்தால் உங்கள் முகங்களையும், முழங்கை முட்டுகள் வரை உங்கள் கைகளையும் கழுவிக் கொள்ளுங்கள். மேலும் (ஈரக்கையால்) உங்கள் தலைகளைத் தடவிக் கொள்ளுங்கள். மேலும் கணுக்கால் முட்டுகள் வரை உங்கள் கால்களையும் (கழுவிக் கொள்ளுங்கள்). (5:7)


بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

தொகுதி 6

இதழ் 18

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

23 ரமலான் 1442 ஹிஜ்ரி கமரி 06 ஹிஜ்ரத் 1400 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக் 06 மே 2021


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**மக்களின் உள்ளங்களில் ஆபத்தான கொள்கைகளும், தவறான சிந்தனைகளும் குடி கொண்டுள்ளன. அவற்றை அகற்றுவதற்காகவும் அந்த இடத்தில் அமைதி நிறைந்த கொள்கைகளை நிலைநாட்டுவதற்காகவும் நமது ஜமாஅத் (தோன்றி) உள்ளது**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி [அலை] அவர்களின் கூற்றுகளிலிருந்து...

உலகம் மற்றும் அதன் தொடர்புகளிலிருந்தும், நாட்டங்களிலிருந்தும் நாம் முற்றிலும் தனித்து நிற்கின்றோம். உலகத்தின் பார்வையில் ஒரு வகையில் நாம் மரணித்தவர்களைப் போன்றவர்களாவோம். நாம் மார்க்கத்திற்காக மட்டுமே உள்ளோம். எமது அனைத்து செயல்பாடுகளும் மார்க்கமாகும். இஸ்லாத்தில் எப்பொழுதும் சான்றோர்களும், இமாம்களும் இருந்து வந்துள்ளனர். அதைப்போன்று எனது எந்த வழிமுறையும் புதியதல்ல. இன்னும் கூறப்போனால், மக்களுக்கு எல்லா வகையிலும் அபாயகரமானதாக உள்ள மக்களின் கொள்கைகளை அகற்றுவதும், அதனை அவர்களின் உள்ளங்களிலிருந்து வெளியேற்றுவதும் எமது அசல் நோக்கமும், எண்ணமும் ஆகும்.

உதாரணமாக, சில அறிவீனர்கள் அந்நிய சமுதாயங்களின் பொருட்களை திருடுவதை ஆகுமானதாகவும், நிராகரிப்பாளர்களின் செல்வங்களை தமக்கு ஆகுமானதாகவும் கருதுகின்றனர். மேலும் தனது அந்த மன இச்சைகளுக்காக சில ஹதீஸ்களையும் உருவாக்கி வைத்துள்ளனர். மேலும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் மீண்டும் வருவார்கள் என்றும் அவர்களின் பணி தடி கொண்டு அடிப்பதும், பன்றிகளை கொல்வதும் ஆகும் என்றும் அவர்கள் நம்புகின்றனர். உண்மை என்னவென்றால், (மார்க்கத்தில் பலவந்தத்திற்கு அனுமதியில்லை). பலவந்தத்தால் எந்த மார்க்கமும் மார்க்கமாகி விடாது.

சுருக்கமாக, இதுபோன்ற மக்களின் உள்ளங்களில் ஆபத்தான கொள்கைகளும், தவறான சிந்தனைகளும் குடி கொண்டுள்ளன. அவற்றை அகற்றுவதற்காகவும் அந்த இடத்தில் அமைதி நிறைந்த கொள்கைகளை நிலைநாட்டுவதற்காகவும் நமது ஜமாஅத் (தோன்றி)உள்ளது. சீர்திருத்தவாதிகள் அல்லாஹ்வின் நேசர்கள் மற்றும் நல்ல விஷயங்களை கற்றுக் கொடுப்பவர்களை உலகவாதிகள் எதிர்க்கின்றனர். இவ்வாறே எப்போதும் நடந்து வந்துள்ளது. இதுபோன்றே நம்முடனும் நடந்துள்ளது. எதிரிகள் நமக்கு எதிராக தவறான செய்திகளை முற்றிலும் இட்டுக்கட்டியும், பொய்யின் துணை கொண்டும் பரப்பி வைத்துள்ளனர். எந்த அளவுக்கு என்றால் எமக்கு தீங்கிழைப்பதற்காக, இந்த நபர் குழப்பவாதி ஆவார் என்றும், கிளர்ச்சி செய்யும் எண்ணம் கொண்டுள்ளார் என்றும் தவறான அறிக்கைகளை அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இந்த மக்கள் இவ்வாறு செய்வது அவசியமானதாக இருந்தது. ஏனென்றால் அறிவீனர்கள் தனது நலம் விரும்பிகளுடன் அதாவது நபிமார்களுடனும், அவர்களின் வாரிசுகளுடனும் எப்போதும் எக்காலத்திலும் இவ்வாறு நடந்துள்ளனர். ஆனால் இறைவன் மனிதனை கண்காணிப்பவனாக இருக்கின்றான். அரசாங்க ஊழியர்களும் அந்த மக்களை நன்கு அறிந்தவர்களாக இருக்கின்றார்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 283 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## நபிமொழி – அவர் தூயவர் என ஒருவரைக் குறித்து கூறுவது

(1243) அன்சாரி பெண்மணியும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் பைஅத் செய்திருந்தவருமான ஹஸ்ரத் உம்முல் அலாஹ் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: முஹாஜிரீன் சீட்டு குலுக்கிப்போட்டு பங்கிடப்படுவார்கள். ஹஸ்ரத் உஸ்மான் பின் மழ்ஊன் (ரலி) அவர்கள் எங்களது பங்கில் வந்தார்கள். நாங்கள் அன்னாரை விருந்தினராக எங்களது வீட்டில் தங்க வைத்தோம். பின்னர் அன்னார் நோயுற்றார்கள். மேலும் அந்நோயிலேயே மரணமடைந்து விட்டார்கள். அன்னார் மரணமடைந்தபோது நீராட்டப்பட்டார்கள். மேலும் அன்னாரின் ஆடையிலேயே கஃபன் அணிவிக்கப்பட்டார்கள். அப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் உள்ளே வந்தார்கள். அபூஸ்ஸாயிபே! (உஸ்மான் மழ்ஊன் (ரலி) அவர்களே) உம்மீது அல்லாஹ்வின் கருணை உண்டாகட்டுமாக! நிச்சயமாக அல்லாஹ்தான் உமக்கு கண்ணியம் வழங்கினான் என்று உம்மைக் குறித்து சாட்சி கூறுகிறேன் என நான் கூறினேன். (அதற்கு) அல்லாஹ் அவருக்கு கண்ணியம் வழங்கினான் என்று எப்படி தெரியும்? என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு நான் யா ரஸூலல்லாஹ்! எனது தாயும், தந்தையும் தங்கள் மீது அர்ப்பணம் ஆகட்டுமாக! அப்படியென்றால் வேறு யாருக்கு அல்லாஹ் கண்ணியம் வழங்கினான்? என்று நான் கேட்டேன். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: அவரது நிலை என்னவென்றால், அவருக்கு மரணம் ஏற்பட்டு விட்டது. இறைவன் மீது ஆணையாக! நான் அவருக்காக நன்மையையே நாடுகிறேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் இறைவனின் தூதர் ஆவேன். ஆயினும் என்னுடன் என்ன நடக்கும் என்பது எனக்கும் தெரியாது.

ஹஸ்ரத் உம்முல் அலாஹ் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறி வந்தார்கள்: இறைவன் மீது ஆணையாக! இதன் பிறகு நான் எவரைக் குறித்தும் அவர் தூயவர் எனக் கூற மாட்டேன். (சஹீஹுல் புகாரி தொகுதி 2, கிதாபுல் ஜனாயிஸ் – 2006 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபா மற்றும் துன் நூரைன் ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃபான் (ரலி) அவர்களின் போற்றுதலுக்குரிய பண்புகளின் நற்குறிப்புகள்**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 02 ஏப்ரல் 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **ஷஹாதத்** மாதம் **02 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ أَمْوَالَهُمْ بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

கடந்த குத்பாவிற்கு முன்பாக ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தது. இன்றும் அதே நற்குறிப்பு இடம் பெறும். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடம் வெட்கமும், நாணமும் மிக அதிமாக இருந்தது. இது பற்றி இவ்வாறு அறிவிப்பு வருகிறது.

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: எனது சமுதாயத்தைச் சேர்ந்தவர்களில் என் சமுதாயத்தின் மீது அதிகம் கருணை காட்டக்கூடியவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) ஆவார்கள். அவர்களில் அல்லாஹ்வின் மார்க்கத்தில் மிக அதிகமாக உறுதியுடன் இருப்பவர் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆவார்கள். அவர்களில் மிக அதிகமாக நாணம் கொண்டவர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஆவார்கள். அவர்களில் மிகவும் சிறந்த முறையில் தீர்ப்பு வழங்கக் கூடியவர் ஹஸ்ரத் அலி பின் அபீ தாலிப் (ரலி) ஆவார்கள்.

அவர்களில் அல்லாஹ்வின் வேதத்தை எல்லாரையும் விட மிக அதிகமாக அறியக் கூடியவர் ஹஸ்ரத் உபீ பின் கஅப் (ரலி) ஆவார்கள். அவர்களில் ஹலால் மற்றும் ஹராமை எல்லாரையும் விட நன்கு அறிந்தவராக இருப்பவர் ஹஸ்ரத் மஆஸ் பின் ஜபல் (ரலி) ஆவார்கள். அவர்களில் எல்லாரையும் விட மிக அதிகமாக கடமைகளை அறிந்தவர் ஹஸ்ரத் ஸைது பின் சாபித் (ரலி) ஆவார்கள். கேளுங்கள்! ஒவ்வொரு சமுதாயத்திலும் ஒரு நம்பிக்கைக்குரியவர் இருக்கின்றார். இந்த சமுதாயத்தின் நம்பிக்கைக்குரியவர் ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜராஹ் (ரலி) ஆவார்கள்.

(சுனன் இப்னு மாஜா, இஃப்தாஹுல் கிதாப் பாப் ஃபஸாயில் ஸைது பின் சாபித், ஹதீஸ் எண் 154)

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எனது சமுதாயத்தின் மீது எல்லாரையும் விட அதிகமாக கருணை காட்டக்கூடியவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) ஆவார்கள். மேலும் அல்லாஹ்வின் கட்டளைகளை செயல்படுத்துவதில் எல்லாரையும் விட மிகவும் உறுதி வாய்ந்தவராக இருப்பவர் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆவார்கள். அவர்களில் எல்லாரையும் விட அதிக வெட்க உணர்வு கொண்டர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஆவார்கள்.

(சுனன் திர்மிதி, அப்வாபுல் மனாகிப் பாப் மனாகிப் முஆஸ் பின் ஜபல் ஹதீஸ் எண் 3790)

ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃபான் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ஒருபோதும் கவனமற்றவராக இருக்கவில்லை. நான் ஒருபோதும் ஆசை கொள்ளவும் இல்லை.

(சுனன் இப்னு மாஜா, கிதாபுத் தஹாரத்.......... ஹதீஸ் எண் 311)

அதாவது கிலாஃபத் அல்லது வேறொரு பதவிக்கு அல்லது தவறான விருப்பத்திற்கு எண்ணம் கொள்ளவில்லை.

இது தொடர்பாக அதாவது அன்னாரின் வெட்க உணர்வு தொடர்பாக ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் இவ்வாறு அறிவிப்பு செய்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனது வீட்டில் தனது தொடை அல்லது கணுக்காலிலிருந்து ஆடையை விலக்கியவாறு படுத்திருந்தார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உள்ளே வர அனுமதி வேண்டினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதே நிலையில் அவர்களுக்கு அனுமதி வழங்கி விட்டார்கள்.

பின்னர் அன்னாருடன் உரையாடிக் கொண்டிருந்தார்கள். பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அனுமதி வேண்டினார்கள். அதே நிலையில் அன்னாருக்கும் உள்ளே வர அனுமதி வழங்கி விட்டார்கள். பின்னர் அன்னாரிடமும் பேசிக் கொண்டிருந்தார்கள். மேலும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அனுமதி வேண்டியபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் (படுக்கையிலிருந்து எழுந்து) அமர்ந்து விட்டார்கள். மேலும் தனது ஆடைகளை சரி செய்து கொண்டார்கள்.

முஹம்மது என்ற அறிவிப்பாளர் கூறுகின்றார்: இவை அனைத்தும் ஒரே நாளில் நடந்தவை ஆகும். இந்த சம்பவம் ஒரே நாளில் பல்வேறு தருணங்களில் நடந்த விஷயங்கள் அல்ல. ஆக அவர்கள் வந்தார்கள். பேசிக் கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் சென்று விட்ட பிறகு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) வந்தார்கள். ஆனால் அன்னாருக்காக தாங்கள் எந்த சிறப்பு கவனமும் செலுத்தவில்லை. பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வந்தார்கள். அவர்கள் மீதும் தாங்கள் அவர்கள் எந்த சிறப்பு கவனமும் செலுத்தவில்லை. ஆனால் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் உள்ளே வந்தபோது, தாங்கள் அமர்ந்து விட்டீர்கள். பின்னர் தங்களது ஆடைகளையும் சரி செய்து கொண்டீர்களே? என்று கேட்டார்கள். அதற்கு, எந்த நபரிடம் வானவர்கள் நாணம் கொள்கின்றார்களோ அந்த நபரை நான் கருத்தில் கொள்ள வேண்டாமா? என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள்.

மற்றுமொரு இடத்தில் இந்த அறிவிப்பை எடுத்துரைத்தவாறு இந்த விஷயம் எழுதப்பட்டுள்ளது. அதாவது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: தாங்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்காக மட்டும் இந்த சிறப்பு ஏற்பாட்டைச் செய்தீர்கள். தாங்கள் அவ்வாறு ஏன் செய்தீர்கள்? அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், எவரிடம் வானவர்கள் நாணம்

கொள்கின்றார்களோ அவரிடம் நான் நாணம் கொள்ள வேண்டாமா? எந்த இறைவனின் கட்டுப்பாட்டில் முஹம்மதின் (ஸல் – அவர்களின்) உயிர் உள்ளதோ அந்த இறைவன் மீது ஆணையாக! நிச்சயமாக வானவர்கள் இதுபோன்றே ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடம் நாணம் கொள்கின்றனர். அதாவது அவர் எவ்வாறு வானவரிடமும், அல்லாஹ்விடமும், அவனது தூதரிடமும் நாணம் கொள்கின்றாரோ அதேபோன்று அவர்களும் நாணம் கொள்கின்றனர். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் உள்ளே வந்திருந்தபோது நீர் எமக்கு அருகில் இருந்திருந்தால் அவர் திரும்பி2ச் செல்லும் வரை தனது தலையை உயர்த்தி இருக்க மாட்டார். அதாவது அவர் பார்வையை உயர்த்தி இருக்க மாட்டார். மேலும் எதுவும் பேசியிருக்க மாட்டார். இந்த அளவிற்கு அவரிடம் வெட்கம் இருந்தது.

(மஜ்மவுஸ் ஷவாஹித் தொகுதி 9 பக்கம் 59,60 கிதாபுல் மனாகிப் ஃபீ ஹயா ஹதீஸ் எண் 14504 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஸ்லிஹ் முவ்வூது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் இந்த சம்பவத்தை எடுத்துரைத்தவாறு கூறினார்கள். (அதாவது அல்லாஹ்வின் கரீம் என்ற பண்பை எடுத்துரைத்தவாறு அன்னார் இதனைக் கூறுகின்றார்கள்:) அல்லாஹ் கண்ணியமிக்கவனாக இருக்கின்றான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒரு சம்பவம் உள்ளது. அதிலிருந்து கண்ணியமிக்கவரிடம் வெட்கம் கொள்ளப்படுகிறது என்பது தெரிய வருகிறது. அதாவது எவர் கண்ணியமிக்கவராக இருப்பாரோ அவரிடம் வெட்கம் கொள்ளப்படும்.

ஹதீஸ்களில் வந்துள்ளது. ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது வீட்டில் படுத்திருந்தார்கள். அன்னாரின் கால்களின் ஒரு பகுதி வெளிப்பட்டிருந்தது. அந்நிலையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வந்தார்கள். அங்கு அமர்ந்து கொண்டார்கள். பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வந்தார்கள். அன்னாரும் அங்கு அமர்ந்து கொண்டார்கள். அந்நிலையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எதையும் பொருட்படுத்தவில்லை. ஆனால் சிறிது நேரம் கழிந்த நிலையில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் வீட்டின் கதவை தட்டினார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உடனே எழுந்து அமர்ந்து கொண்டார்கள். மேலும் தமது கால்களை ஆடைகளால் மறைத்துக் கொண்டார்கள்.

மேலும் அன்னார் கூறினார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மிகவும் வெட்க உணர்வு கொண்டவர் ஆவார்கள். அவருக்கு முன்னால் கால்களின் சிறு பகுதியை வெளிப்படுத்துவது வெட்கத்தை தருகின்றது.

ஹதீஸின் இந்த சொற்கள் முன்னரும் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வீட்டில் அமர்ந்திருந்தார்கள். அன்னாரின் கணுக்கால்களிலிருந்து ஆடை விலகியிருந்தது. அந்நிலையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உள்ளே வர அனுமதி வேண்டினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் படுத்திருந்தார்கள். அந்நிலையிலேயே உள்ளே வர அனுமதி வழங்கி விட்டார்கள். பின்னர் அன்னாரிடம் பேசிக் கொண்டிருந்தார்கள். பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் உள்ளே வர அனுமதி வேண்டினார்கள். அன்னாருக்கும் படுத்தவாறே அனுமதி வழங்கி விட்டார்கள். பின்னர் சிறிது நேரம் கழித்து ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் வந்தார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எழுந்து விட்டார்கள். மேலும் தனது ஆடையை சரி செய்து விட்டார்கள். பின்னர் அன்னாருக்கு உள்ளே வர அனுமதி வழங்கினார்கள்.

அனைவரும் சென்று விட்ட பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் இவ்வாறு கேள்வி கேட்டார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வந்தார்கள். அந்நிலையில் தாங்கள் எந்த சிறப்பு கவனமும் செலுத்தவில்லை. அப்படியே படுத்த நிலையிலேயே இருந்தீர்கள். ஆனால் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் வந்தபோது தாங்கள் எழுந்து நின்று விட்டீர்கள். மேலும் ஆடையை சரி செய்து கொண்டீர்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஆயிஷாவே (ரலி)! எவரிடம் வானவர்கள் நாணம் கொள்கின்றார்களோ அவருடன் நான் நாணம் கொள்ள வேண்டாமா? என்று கேட்டார்கள்.

ஆக பாருங்கள்! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் நாணத்தை கருத்தில் கொண்டார்கள். அன்னார் மக்களிடம் நாணம் கொண்டிருந்தார்கள். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகள் (ஸல்) அவர்களும் அன்னாரிடம் நாணம் கொண்டார்கள்.

இந்த சம்பவத்தை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இறைவன் கண்ணியமிக்கவனாக இருக்கின்றான். எனவே மக்கள் பாவங்களிலிருந்து தப்பிப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். வெட்கப்பட வேண்டும். இறைவனது கூற்றை ஒப்புக் கொள்ள வேண்டும். அவ்வாறல்லாமல் இறைவன் மிகவும் கருணையாளனாக இருக்கின்றான். நம்மீது கருணை காட்டி விடுவான் என்று எண்ணம் கொண்டு பாவங்கள் செய்வதில் தைரியம் கொள்ளக்கூடாது.

இந்த விஷயத்தை கருத்தில் கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் ஒரு பண்பு கண்ணியமிக்கவன் என்பதாகும். அவ்வாறிருக்க அடியாரும் வெட்கம் கொள்ள வேண்டும். பாவத்திலிருந்து விலகியிருக்க முயற்சி செய்ய வேண்டும்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 8 பக்கம் 259)

பணிவு மற்றும் எளிமை குறித்து வருகின்றது. அப்துல்லாஹ் ரோமி அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் இரவில் வுளு செய்வதற்கு சுயமே ஏற்பாடு செய்து கொள்வார்கள். நீங்கள் ஒரு வேலைக்காரருக்கு கட்டளையிட்டால் அவர் தங்களுக்காக அந்த ஏற்பாட்டைச் செய்து விடுவாரே என்று கூறப்பட்டது. அதற்கு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், இரவு அந்த மக்களுக்குரியதாகும். அதில் அவர்கள் ஓய்வு எடுக்கின்றனர் என்று கூறினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 33 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அதாவது பணி செய்யக்கூடிய தொண்டர்களுக்கு இரவில் ஓய்வு எடுப்பதற்கு அவகாசம் கொடுக்க வேண்டும்.

அல்கமா பின் வக்காஸ் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் சொற்பொழிவு மேடையில் இருந்தபோது உஸ்மான் (ரலி) அவர்களே! தாங்கள் இந்த சமுதாயத்தை மிகவும் ஒரு கடினமான விவகாரத்தில் ஆழ்த்தி விட்டீர்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் குத்பா கொடுத்தார்கள். சில விஷயங்களை கூறினார்கள். சமுதாயத்தை எச்சரித்தார்கள். அப்போது நீங்கள் தவ்பா செய்யுங்கள். அவர்களும் தங்களுடன் தவ்பா செய்யட்டும் என்று சஹாபி கூறி விட்டார். அல்லாஹ்வின் மீதான அச்சத்தை மிக அதிகமாக அன்னார் ஏற்படுத்தினார்கள். அப்போது ஒரு சஹாபி

இவ்வாறு கூறினார். (அறிவிப்பாளர் அறிவிக்கின்றார்:) அப்போது உடனடியாக ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் தனது முகத்தை கிப்லாவை நோக்கி திருப்பிக் கொண்டார்கள். தனது இரண்டு கரங்களை உயர்த்தி இவ்வாறு துஆ செய்தார்கள்:

اَللّٰهُمَّ إِنِّيْ أَسْتَغْفِرُكَ وَأَتُوْبُ إِلَيْكَ

அதாவது அல்லாஹ்வே! நிச்சயமாக நான் உன்னிடம் பாவமன்னிப்பு வேண்டுகின்றேன். நான் உன் பக்கம் குனிகின்றேன்.

அந்த சந்தர்ப்பத்தில் இருந்த மக்களும் தங்களது கரங்களை உயர்த்தி இவ்வாறு துஆ செய்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 39 உஸ்மான் பின் அஃபான் – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அரபிய்யில் அச்சிடப்பட்டது)

இது அல்லாஹ்வின் மீதான அச்சம் மற்றும் அன்னாரிடமிருந்த பணிவின் அந்தஸ்தாகும். அன்னார் உடனடியாக துஆவிற்கு கரங்களை உயர்த்தினார்கள். எந்த தர்க்கத்திலும் ஈடுபடவில்லை. தனக்காகவும் துஆ செய்தார்கள். சமுதாயத்திற்காகவும் துஆ செய்தார்கள்.

அன்னாரிடம் காணப்பட்ட வள்ளல் தன்மை, இறை வழியில் செலவு செய்தல் ஆகியவற்றைப் பற்றியும் அறிவிப்புகளில் கிடைக்கின்றன. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் பத்து விஷயங்களை எனது இறைவனின் சந்நிதானத்தில் மறைத்து வைத்துள்ளேன். முதன் முதலில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களில் நான் நான்காம் நபராவேன். நான் ஒருபோதும் கேளிக்கையான பாடல்களை கேட்கவும் இல்லை. பொய்யான விஷயங்களை ஒருபோதும் பேசியதும் இல்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் பைஅத் செய்ததிலிருந்து நான் ஒருபோதும் எனது வெட்கத் தலத்தை எனது வலக்கரத்தால் தொட்டதில்லை. இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட பிறகு அடிமைகளை விடுதலை செய்யாத ஜுமுஆ நாளை நான் கடக்கவில்லை. ஆயினும் என்னிடம் விடுதலை செய்வதற்கு அடிமைகள் இல்லாத நிலையில் ஜுமுஆ நாள் வந்தால் தவிர. (அனைத்து ஜுமுஆ நாளன்றும் நான் அடிமைகளை விடுதலை செய்துள்ளேன்.) அந்நிலையில் ஜுமுஆ அன்று மட்டுமல்லாமல் மற்ற நாளிலும் அடிமைகளை விடுதலை செய்துள்ளேன். இஸ்லாம் வருவதற்கு முந்தைய அறிவீனமான காலகட்டத்திலும் இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட நிலையிலும் நான் விபச்சாரம் செய்ததில்லை.

(மஜ்மவுஸ் ஸவாஹித் தொகுதி 9 பக்கம் 65 கிதாபுல் மனாகிப் பாப் ஃபீமா கான ஃபீஹி மினல் கைர் ஹதீஸ் எண் 14525 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அடிமை அபூ சயீத் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் தனது வீட்டில் முற்றுகையிடப்பட்டிருந்தபோது 20 அடிமைகளை அன்னார் விடுதலை செய்தார்கள்.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்திஸ் சஹாபா லி இப்னி கஸீர் தொகுதி 3 பக்கம் 489 உஸ்மான் பின் அஃபான் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மசூது (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் ஒரு போரில் இருந்தோம். அப்போது மக்களுக்கு பசியின் வேதனை ஏற்பட்டிருந்தது. எந்த அளவுக்கென்றால் முஸ்லிம்களின் முகத்தில் வேதனையும், நயவஞ்சகர்களின் முகத்தில் மகிழ்ச்சியின் அடையாளங்களும் தென்பட்டன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த நிலையைக் கண்டபோது அன்னார் கூறினார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! அல்லாஹ் உங்களுக்கு உணவிற்கான ஏற்பாட்டை செய்யாமல் சூரியன் அஸ்தமம் ஆகாது.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு இந்த விஷயம் சென்றடைந்தது. அப்போது அல்லாஹ்வும், அவனது தூதரும் முற்றிலும் உண்மை கூறுகின்றார்கள் என்று கூறினார்கள். எனவே அன்னார் (ரலி) அவர்கள், 14 ஒட்டகங்களை உணவு தானியங்களுடன் விலைக்கு வாங்கினார்கள். அவற்றில் 9 ஒட்டகங்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் அனுப்பி வைத்து விட்டார்கள். அதைப் பார்த்து விட்டு இது என்ன? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் இவற்றை அன்பளிப்பாக தங்களிடம் அனுப்பி வைத்துள்ளார்கள் என்று கூறப்பட்டது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முகத்தில் மகிழ்ச்சியும், சந்தோஷமும் பரவி விட்டது. நயவஞ்சகர்களின் முகங்களில் நிம்மதியின்மையும், கஷ்டமும் படிந்து விட்டது.

அப்போது நான் இவ்வாறு கண்டேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது இரு கரங்களையும் மேலே உயர்த்தினார்கள். எந்த அளவுக்கு என்றால் அன்னாரது அக்குளின் வெண்மை வெளிப்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்காக துஆ செய்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வேறு ஒருவருக்காக இவ்வாறு துஆ செய்தவாறு இதற்கு முன் நான் கண்டதில்லை. அதற்கு முன்பும், அதற்கு பின்பும் நான் அவ்வாறு துஆ செய்ததை கேட்டதும் இல்லை. அந்த துஆ இதுவாகும்:

اَللّٰهُمَّ أَعْطِ عُثْمَانَ، اَللّٰهُمَّ افْعَلْ بِعُثْمَانَ

பொருள்: அல்லாஹ்வே! நீ உஸ்மானுக்கு அதிகமாக வழங்குவாயாக. அல்லாஹ்வே! நீ உஸ்மான் மீது உனது அருளையும், கருணையையும் இறக்குவாயாக.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னிடம் வருகை தந்தார்கள். அப்போது இறைச்சியை பார்த்து விட்டு இதனை யார் அனுப்பியது? என்று கேட்டார்கள். அதற்கு நான் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் என்று கூறினேன்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தனது இரு கரங்களையும் உயர்த்தி ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்காக துஆ செய்ததை நான் கண்டேன்.

(மஜ்மவுஸ் ஸவாஹித் தொகுதி 9 பக்கம் 64 கிதாபுல் மனாகிப் ஹதீஸ் எண் 14520, 14523 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

முஹம்மது பின் ஹிலால் தனது தந்தைவழிப் பாட்டியிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: அன்னாரின் தந்தைவழிப் பாட்டி ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் சமூகத்தில் சென்று ஆஜரானார்கள். அப்போது அன்னார் வீட்டில் முற்றுகையிடப்பட்டிருந்தார்கள். அவர் கூறுகின்றார்: அன்னாரது தந்தைவழிப் பாட்டியின் வீட்டில் மகன் பிறந்திருந்தான். அவனுக்கு ஹிலால் என பெயரிடப்பட்டிருந்தது. ஒரு நாள் அவரைக் காணாதபோது அன்னார் விசாரித்தார்கள். இன்று இரவு அன்னாருக்கு மகன் பிறந்துள்ளான் என்பது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு தெரிய வந்தது. அப்போது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், எனக்கு 50 திர்ஹம்களையும், ஒரு பெரிய

போர்வையின் ஒரு பகுதியையும் அனுப்பி வைத்து, இது உமது மகனுக்கான தொகையாகும். மேலும் இது அவர் உடுத்துவதற்கான ஆடையாகும் என்று ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கூறியதாகவும், அவனுக்கு ஒரு வயது ஆன பிறகு நான் அவரது சலுகைத் தொகையை 100 ரூபாயாக உயர்த்தி விடுவேன் என்றும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கூறியதாகவும் எனது தந்தைவழிப் பாட்டி கூறுகின்றார்கள்.

(அல்பதாயத்து வந்நஹானிய்யா லி இப்னு அஸீர் தொகுதி 4 பக்கம் 206 ஹிஜ்ரி 35 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இப்னு சஅத் பின் யர்பூஃ அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஒரு முறை மதிய வேளையில் வீட்டை விட்டு வெளியே வந்தேன். அப்போது நான் சிறுவனாக இருந்தேன். என்னிடம் ஒரு பறவை இருந்தது. அதை நான் பள்ளிவாசலுக்கு சென்று பறக்க விட்டு வந்தேன். நான் ஒரு நாள் இவ்வாறு கண்டேன். அங்கு அழகிய முகம் கொண்ட பெரியவர் ஒருவர் படுத்திருந்தார். அன்னாரது தலைக்குக்கீழ் செங்கலின் ஒரு சிறிய பகுதி இருந்தது. அதாவது தலையனைக்குப் பகரமாக செங்கலை வைத்திருந்தார். நான் எழுந்து நின்று அன்னாரின் அழகை ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தேன். அன்னார் தனது கண்களை திறந்து, சிறுவனே! நீ யார் என்று கேட்டார்கள். நான் என்னைப் பற்றி கூறினேன்.

அப்போது அவர் அருகில் உறங்கிக் கொண்டிருந்த ஒரு சிறுவனை அழைத்தார்கள். ஆனால் அவன் எந்த பதிலும் வழங்கவில்லை. அப்போது அவரை அழைத்து வரும்படி அன்னார் என்னிடம் கூறினார்கள். நான் சென்று அவரை அழைத்து வந்தேன். அந்த பெரியவர் ஒன்றைக் கொண்டு வரும்படி அவருக்கு கட்டளையிட்டார்கள். மேலும் என்னை அமரும்படி கட்டளையிட்டார்கள். பின்னர் அந்த சிறுவன் சென்றார். ஓர் ஆடையையும், ஓராயிரம் திர்ஹம்களையும் எடுத்துக் கொண்டு வந்தார். மேலும் அவர் எனது ஆடைகளை கழற்றி அதற்கு பகரமாக அந்த ஆடையை எனக்கு உடுத்தினார். மேலும் ஓராயிரம் திர்ஹம்களை அந்த ஆடையில் போட்டு விட்டார்.

நான் எனது தந்தையிடம் திரும்பிச் சென்றேன். அவரிடம் நடந்த அனைத்தையும் கூறினேன். அப்போது எனது தந்தை என்னிடம் எனது மகனே! உம்முடன் இவ்வாறு நடந்து கொண்டது யார்? என்று உனக்குத் தெரியுமா? என்று கேட்டார்கள். அதற்கு நான் தெரியாது என்று கூறினேன். அந்த நபர் பள்ளிவாசலில் தூக்கிக் கொண்டிருந்தார். அவரை விட அழகானவரை நான் எனது வாழ்க்கையில் கண்டதில்லை என்பதைத்தவிர வேறு எதுவும் எனக்குத் தெரியாது என்று கூறினேன். அப்போது அவர் அமீருல் மூமினீன் ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃபான் (ரலி) ஆவார்கள் என்று என்னிடம் அன்னார் கூறினார்கள்.

(அல்பதாயத்து வந்நஹானிய்யா லி இப்னு அஸீர் தொகுதி 4 பக்கம் 206,207 ஹிஜ்ரி 35 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இப்னு ஜரீர் அவர்கள் அறிவிப்பு செய்கின்றார்கள். ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை அன்னார் பள்ளிவாசலை நோக்கி சென்று கொண்டிருக்கும்போது சந்தித்தார்கள். அப்போது நான் உங்களிடம் கடனாக பெற்றிருந்த உங்களுடைய ஐம்பதாயிரம் திர்ஹம் தற்போது என்னிடம் உள்ளது. தாங்கள் அதனை பெற்றுக் கொள்வதற்கு என்னிடம் ஒருவரை அனுப்பி வையுங்கள் என்று கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அன்னாரிடம், தங்களின் அன்பின் காரணமாக அதனை நான் அன்பளிப்பு செய்து விட்டேன். அதை நான் திரும்பப் பெற விரும்பவில்லை என்று கூறினார்கள்.

அஸ்மஇ அவர்கள் கூறுகின்றார்கள்: இப்னு ஆமிர் அவர்கள் கத்அன் பின் அவ்ஃப் ஹிலாலி அவர்களை மான் எனும் பகுதிக்கு கவர்னராக ஆக்கினார்கள். அவர் 4000 முஸ்லிம்கள் கொண்ட படையை அழைத்துக் கொண்டு புறப்பட்டார். வழிப்பாதையில் ஓரிடத்தில் மழைநீர் தேங்கியது. அதனால் வழிப்பாதை அடைபட்டு விட்டது. கத்அன் அவர்களுக்கு குறித்த நேரத்தில் உரிய இடத்தை அடைவதில் தாமதம் ஏற்படும் விடும் என்ற அச்சம் ஏற்பட்டது. அப்போது அன்னார் எந்த நபர் இந்த இடத்தை தாண்டி செல்வாரோ அவருக்கு ஓராயிரம் திர்ஹம் அன்பளிப்பாக வழங்கப்படும் என்று அறிவிப்புச் செய்தார்கள். அப்போது மக்கள் நீச்சல் அடித்து அந்த இடத்தை கடந்தார்கள். ஒருவர் அந்த இடத்தை கடந்து விடும்பொழுது இவருக்கு அவருக்குரிய பரிசை வழங்குங்கள் என்று கத்அன் கூறுவார்கள். எந்த அளவுக்கென்றால் முழு படையும் அந்த இடத்தை கடந்து விட்டது. இவ்வாறு அவர்கள் அனைவருக்கும் 40 இலட்சம் திர்ஹம்கள் வழங்கப்பட்டு விட்டன. ஆனால் கவர்னர் இப்னு ஆமிர் அவர்கள் கத்அன் அவர்களுக்கு இந்த தொகையை கொடுக்க மறுத்து விட்டார்கள். மேலும் இந்த விஷயத்தை ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கும் எழுதி அனுப்பினார்கள்.

அப்போது இந்த தொகையை கத்ஆன் அவர்களுக்கு கொடுத்து விடுங்கள். ஏனென்றால் அவர் அல்லாஹ்வின் வழியில் முஸ்லிம்களுக்கு உதவி செய்துள்ளார். அந்த இடத்தை கடப்பதற்காக அந்த அன்பளிப்பு வழங்க நேரிட்டது என்று ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(அல்பதாயத்து வந்நஹானிய்யா லி இப்னு அஸீர் தொகுதி 4 பக்கம் 208 ஹிஜ்ரி 35 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஒரு முறை நோயுற்றிருந்தபோது அன்னாரிடம் கலீஃபாவை நியமிக்கும்படி வேண்டப்பட்டது. இந்த சம்பவத்தை ஹஷ்ஷாம் அவர்கள் தனது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள். அன்னார் கூறினார்கள்: மர்வான் பின் ஹகம் என்னிடம் கூறினார்கள்: எந்த ஆண்டு தொற்றுநோய் பரவியதோ அப்போது ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃபான் (ரலி) அவர்களுக்கும் தொற்றுநோய் ஏற்பட்டது. அன்னாரின் மூக்கிலிருந்து இரத்தம் வடிந்தது. எந்த அளவுக்குகென்றால் அந்த நோயானது அன்னாரை ஹஜ் செய்ய முடியாமல் தடுத்து விட்டது. அப்போது அன்னார் வஸிய்யத்தும் செய்து விட்டார்கள். அப்போது குரைஷிகளின் ஒரு நபர் அன்னாரிடம் வந்தார்.

தாங்கள் யாரையாவது ஒருவரை கலீஃபாவாக நியமித்து விடுங்கள். தங்களின் நிலை மோசமாகி வருகின்றது. எனவே ஒருவரை கலீஃபாவாக நியமித்து விடுங்கள் என்று அவர் கூறினார். இந்த விஷயங்களை மக்கள் பேசுகின்றார்களா? என ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு ஆம் என்று அவர் கூறினார். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், அவர்கள் யாரை கலீஃபாவாக நியமிக்க வேண்டுமென விரும்புகின்றார்கள் என்று கேட்டார்கள். அதற்கு அவர் அமைதியாக இருந்தார். இதற்கிடையில் மற்றுமொரு நபர் அன்னாரிடம் வந்தார். அவர் ஹாரிஸ் ஆக இருந்தார் என்று நான் கருதுகிறேன். கலீஃபாவை நியமித்து விடுங்கள் என்று அவர் கூறினார்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், மக்கள் இதனைக் கூறினார்களா? என்று கேட்டார்கள். அதற்கு அவர் ஆம் என்று கூறினார். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், யார் கலீஃபாவாக இருப்பார்? என்று கேட்டார்கள். அவர் அமைதியாக இருந்தார்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், அவர்கள் ஸுபைரை கூறுகின்றார்களா? என்று கேட்டார்கள். அதற்கு அவர், ஆம்! என்று கூறினார். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், எந்த இறைவனின் கரத்தில் எனது உயிர் உள்ளதோ அவன் மீது ஆணையாக! நான் அறிந்த வரை அவர் அவர்களில் நிச்சயம் சிறந்தவர் ஆவார். அவர்களில் எல்லாரையும் விட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அவரே விருப்பத்திற்குரியவராக இருந்தார் என்று கூறினார்கள்.

அன்னாருக்கு வஹீயை எழுதுவதற்கும் வாய்ப்பு கிடைத்தது. ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது: சூரா முஸ்ஸம்மில் இறங்கிய சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு வஹீயை எழுதுவதற்கான நற்பாக்கியம் கிடைத்தது.

உம்மே குல்ஸூம் பின் ஷமாமா அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் இவ்வாறு கூறினேன்: நாங்கள் உங்களிடம் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைப் பற்றி கேட்கின்றோம். ஏனென்றால் அன்னாரைப் பற்றி மக்கள் எங்களிடம் மிக அதிகமாக கேள்வி கேட்கின்றனர். அப்போது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இந்த வீட்டில் ஒரு வெட்பமான இரவில் கண்டேன். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஹஸ்ரத் ஜிப்ராயீல் (அலை) அவர்கள் வஹீயை இறக்கிக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது வஹீ இறங்குகின்றபோது அன்னார் மீது மிகக் கடுமையான சுமை இறங்கி விடும்.

إِنَّا سَنُلْقِي عَلَيْكَ قَوْلًا ثَقِيلًا

நிச்சயமாக நாம் உம்மீது ஒரு சுமையான கூற்றை இறக்குவோம் என்று அல்லாஹ் கூறியுள்ளான். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னால் அமர்ந்து கொண்டு எழுதிக் கொண்டிருந்தார்கள். உஸ்மானே! எழுது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய இதுபோன்ற நெருக்கத்தை அல்லாஹ் மிகவும் கண்ணியமிக்க, மரியாதைக்குரிய ஒரு நபருக்கே வழங்குகின்றான் என்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

**(கன்ஸுல் உம்மால் தொகுதி 7 பக்கம் 23 கிதாபுல் ஃபஸாயில் ஃபஸாயிலுஸ் சஹாபா ஹதீஸ் எண் 36217 – 2004 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)**

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலகட்டத்தில் திருக்குர்ஆன் எழுத்துப் பிரதிகள் ஒன்றுகூட்டப்பட்டன. அதனை அன்னார் தன்னிடம் வைத்திருந்தார்கள். பின்னர் அந்தப் பிரதிகள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் இருந்தன. அதற்குப் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மகளாகிய ஹஸ்ரத் ஹப்ஸா (ரலி) அவர்களிடம் இருந்தது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டம் வந்தபோது அன்னாரிடம் இந்தப் பிரதிகள் சென்றடைந்தன. அது தொடர்பான அறிவிப்புகள் இவ்வாறு கிடைக்கின்றன.

ஹஸ்ரத் ஹுஸைஃபா பின் யமாம் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அன்னார் ஈராக் வாசிகளுடன் இணைந்து ஆர்மீனியா மற்றும் அஜர் பைஜான் ஆகிய இடங்களை வெற்றி கொள்ள சிரியாவாசிகளுடன் போர் புரிந்து கொண்டிருந்தார்கள். அங்கிருந்து திரும்பி வந்து ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் சமூகத்தை வந்தடைந்தார்கள். ஹஸ்ரத் ஹுஸைஃபா (ரலி) அவர்களுக்கு அந்தப் பகுதியில் இருந்த மக்களிடம் திருக்குர்ஆனை ஓதுவதில் இருந்த கருத்து வேறுபாட்டின் காரணமாக அச்சம் ஏற்பட்டது. எனவே அமீருல் மூமினீன் அவர்களே! இந்த சமுதாயத்தை காப்பாற்றுங்கள். இந்த சமுதாயத்தின் மக்கள் யூத, கிறித்தவர்களைப் போன்று அல்லாஹ்வின் வேதத்தில் முரண்பாடுகள் கொள்வதற்கு முன்பாக இந்த சமுதாயத்தை காப்பாற்றுங்கள் என்று ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடம் அன்னார் கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் திருக்குர்ஆனின் எழுத்துப் பிரதிகளை தமக்கு அனுப்பி வைக்குமாறு ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களுக்கு தூதுச் செய்தி அனுப்பினார்கள். நாங்கள் அதன் ஒரு பிரதியை உருவாக்கி விட்டு அதனை தங்களுக்கு திருப்பி அனுப்பி வைத்து விடுவோம் என்றும் அன்னார் கூறினார்கள்.

எனவே ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களும் தம்மிடமிருந்த அந்த திருக்குர்ஆன் பிரதியை ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு அனுப்பி வைத்து விட்டார்கள். அப்போது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் ஸைது பின் சாபித் (ரலி), ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸுபைர் (ரலி), ஹஸ்ரத் ஸைது பின் ஆஸ் (ரலி), ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் ஹாரிஸ் பின் ஹஷ்ஷாம் (ரலி) ஆகியோரிடம் அந்தப் பிரதியின் ஒரு நகலை தயார் செய்யும்படி கட்டளையிட்டார்கள்.

மேற்குறிப்பிட்ட சஹாபிகளில் முதல் மூன்று குரைஷிகளைச் சேர்ந்த சஹாபிகளிடம் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: உங்களுக்கும், ஸைதிற்கும் இடையில் திருக்குர்ஆனின் ஒரு பகுதியைக் குறித்து கருத்து வேறுபாடு ஏற்பட்டால் அதனை குரைஷிகளின் மொழியில் எழுதுங்கள். ஏனென்றால் திருக்குர்ஆன் குரைஷிகளின் மொழியில் இறங்கியுள்ளது. எனவே இந்த சஹாபிகள் அந்தப் பணியை செய்தனர். நகல்கள் தயாரான பிறகு அசல் பிரதியை ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களுக்கு திருப்பி அனுப்பி வைத்து விட்டார்கள். புதிதாக தயார் செய்யப்பட்ட பிரதிகளை பல்வேறு நாடுகளுக்கு அனுப்பி வைக்கும்படி கட்டளையிட்டார்கள். அதுமட்டுமின்றி அந்தப் பிரதிகளை தவிர்த்து வேறு எந்த பிரதிகள் இருந்தாலும் அதனை எரித்து விடும்படியும் கட்டளையிட்டார்கள்.

(சஹீஹுல் புகாரி ஃபஸாயிலுல் குர்ஆன் பாப் ஜமவுல் குர்ஆன் ஹதீஸ் எண் 4986, 4987)

அல்லாமா இப்னு அல்தீன் அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) ஆகியோர் திருக்குர்ஆன் ஒன்றுகூட்டிய சம்பவத்திலுள்ள வித்தியாசம் இதுவாகும். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இந்த அச்சத்தின் காரணமாக திருக்குர்ஆனை ஒன்று கூட்டினார்கள். அதாவது திருக்குர்ஆனை மனனம் செய்தவர்கள் மரணமடைந்து விட்டால் அத்துடன் திருக்குர்ஆனின் சில பகுதிகளும் வீணாகி விடக்கூடாது என அச்சம் கொண்டார்கள். ஏனென்றால் திருக்குர்ஆன் ஓரிடத்தில் ஒன்றுகூட்டப்படவில்லை. எனவே அன்னார் திருக்குர்ஆனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த வரிசைக் கிரமத்திற்கேற்ப அவர்களை மனனம் செய்ய வைத்திருந்தார்களோ அந்த வரிசை கிரமத்திற்கேற்ப திருக்குர்ஆன் வசனங்களை ஒன்றுகூட்டினார்கள்.

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Sec.Taleem, Melapalayam)

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் திருக்குர்ஆன் ஒன்றுசேர்த்த சம்பவம் இவ்வாறு வருகின்றது. திருக்குர்ஆனை ஓதுவதில் மிக அதிகமான கருத்து வேறுபாடு ஏற்படத் தொடங்கியது. இங்குள்ள மக்கள் தனது வழக்கமுறைப்படியும், அகராதிக்கேற்பவும் திருக்குர்ஆனை ஓதத் தொடங்கி விட்டார்கள். எந்த அளவுக்கு என்றால் ஒருவர் மற்றவருடைய கிராத்தை தவறு என கூறத் தொடங்கி விட்டனர். அப்போது அன்னாருக்கு இந்த விவகாரம் ஆபத்தான நிலையாக ஆகிவிடக் கூடாது என்ற அச்சம் ஏற்பட்டது.

எனவே அன்னார் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தயார் செய்திருந்த பிரதியை சூராக்களின் வரிசைக்கிரமத்திற்கேற்ப ஒரு நூலில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஒன்றுகூட்டினார்கள். குரைஷிகளின் அகராதியை கருத்தில் கொண்டார்கள். திருக்குர்ஆன் குரைஷிகளின் அகராதியில் இறங்கியது என்பதை அதற்கு ஆதாரமாக கொண்டார்கள். துவக்கத்தில் எளிமையை கருத்தில் கொண்டு ஏனைய அகராதிக்கேற்ப திருக்குர்ஆனை ஓதுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. ஆயினும் இனி அவ்வாறு செய்வதற்கு தேவை இல்லை என்பதை அன்னார் கண்டபோது அன்னார் ஒரே அகராதியின் அடிப்படையில் கிராஅத்தை ஒன்றுகூட்ட கட்டளையிட்டார்கள்.

அல்லாமா குர்தபி அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் தமது பிரதிகளுக்கேற்ப ஒன்றுகூட்ட ஏன் சிரமத்தை மேற்கொண்டார்கள்? ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அதற்கு முன்பே அந்தப் பணியை செய்திருந்தார்களே? என்று கேட்கப்படுகிறது. இதற்கான பதில் என்னவென்றால், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஒன்றுபட்ட நிலையில் அந்தப் பிரதியை சேர்ப்பதை நோக்கமாக கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் உம்முல் மூமினீன் ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்ளுக்கு தங்களிடமுள்ள திருக்குர்ஆன் பிரதியை அனுப்பி வையுங்கள். நாங்கள் அதன் ஒரு பிரதியை உருவாக்கி விட்டு அசல் பிரதியை உங்களுக்கு அனுப்பி வைத்து விடுமோம் என்று கூறியதை தாங்கள் கவனிக்கவில்லையா? திருக்குர்ஆன் ஓதுவதில் மக்களிடையே கருத்து வேறுபாடு ஏற்படத் தொடங்கியது. ஏனென்றால், சஹாபிகள் பல்வேறு நகரங்களில் கலைந்து சென்றிருந்தார்கள். கிராஅத்தின் கருத்து வேறுபாட்டின் நிலையில் அபாயம் ஏற்பட்டிருந்தது. சிரியா மற்றும் ஈராக்வாசிகளுக்கு மத்தியில் ஏற்பட்டிருந்த கருத்து வேறுபாட்டைப் பற்றி ஹஸ்ரத் ஹுஸைஃபா (ரலி) அவர்கள் கூறியிருந்தார்கள். எனவே தான் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் இந்த நடவடிக்கையை எடுத்தார்கள்.

(சீரத் அமீருல் மூமினீன் உஸ்மான் பின் அஃபான் பக்கம் 231,232 – 2006 ஆம் ஆண்டு லெபானிலுள்ள பைரூத்தில் தாருல் மஃருஃபாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் சூரத்துல் அஃலாவின் வசனம் سَنُقْرِئُكَ فَلَا تَنْسٰى என்ற வசனத்திற்கு விளக்கமளித்தவாறு கூறுகின்றார்கள்: இந்த வசனத்தின் பொருள் என்னவென்றால், நாம் உமக்கு எத்தகைய வேதத்தை கற்றுக் கொடுப்போம் என்றால் அதனை நீர் கியாமத் வரை மறக்க மாட்டீர். இன்னும் சொல்வதென்றால், அந்த வேதம் இப்போது இருப்பதைப் போன்று அப்படியே பாதுகாப்பாக இருக்கும்.

எனவே இந்த வாதத்திற்கான ஆதாரம் இதுவாகும். அதாவது கடுமையான எதிரிகள் கூட, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த வடிவில் திருக்குர்ஆனை தந்தார்களோ அதே வடிவில் இன்றும் அது பாதுகாப்பாக இருக்கின்றது என்று ஒப்புக் கொள்கின்றனர். நோல்டோக்கே, ஸ்பிரின்கர், வில்லியம் மூர் போன்றோர் தமது புத்தகங்களில் இதனை ஒப்புக் கொண்டுள்ளனர். அதாவது எந்த வடிவில் இஸ்லாத்தின் தோற்றுனர் இந்த வேதத்தை தந்தார்களோ அதே வடிவில் தான் அது இன்றும் உலகிற்கு முன்னால் இருக்கின்றது. திருக்குர்ஆனைத் தவிர வேறு எந்த நூல் தொடர்பாகவும் உறுதியான முறையில் இவ்வாறு நம்மால் கூற முடியாது. எந்த வடிவில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சஹாபிகளுக்கு இந்த நூலை வழங்கினார்களோ அதே வடிவில் அது இப்போதும் பாதுகாப்பாக இருக்கின்றது என்று திருக்குர்ஆன் என்ற ஒரு நூலைப் பற்றியே நம்மால் கூற முடியும் என்று அவர் கூறுகின்றார்.

இந்த மக்கள் திருக்குர்ஆனை இறைவன் புறமிருந்து அருளப்பட்டதாக ஏற்றுக் கொள்வதில்லை. ஆனால் அவர்கள் இந்த நூலை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தாமே உருவாக்கினார் என்ற கொள்கையை கொண்டிருக்கின்றனர். எந்த வடிவில் இந்த நூல் அருளப்பட்டதோ அதே வடிவில் தற்போதும் அது பாதுகாப்பாக இருக்கிறது என்று அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. மாறாக, எந்த வடிவில் இந்த நூலை முஹம்மது (ஸல்) அவர்கள் முன் வைத்தார்களோ அதே வடிவில் தற்போது வரை உலகில் இருக்கின்றது என்பதை ஏற்றுக் கொள்கின்றனர்.

சர் வில்லியம் மூர் தி குர்ஆன் என்ற தனது புத்தகத்தில் எழுதுகின்றார்: இந்த அனைத்து ஆதாரங்களும் உள்ளத்திற்கு ஆறுதல் அளிக்கின்றது. அதாவது இன்று நாம் எந்த திருக்குர்ஆனை படிக்கின்றோமோ அதன் ஒவ்வொரு சொல்லும் நபி (ஸல்) அவர்கள் மக்களுக்கு படித்துக் காட்டியவையாகும்.

பிறகு சர் வில்லியம் மூல் லைஃப் ஆஃப் முஹம்மது என்ற தமது புத்தகத்தில் இவ்வாறு எழுதுகின்றார்: நம் கையில் இருக்கின்ற இந்த திருக்குர்ஆனை முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது காலத்தில் சுயமே உருவாக்கி இருக்கக்கூடும். மேலும் சில முறை இதில் சுயமே சில மாற்றங்களையும் செய்திருக்கக்கூடும். ஆனால் இந்த திருக்குர்ஆன் முஹம்மது (ஸல்) அவர்கள் நமக்கு வழங்கிய அதே திருக்குர்ஆன் ஆகும்.

அதேபோன்று அவர் எழுதுகின்றார்: மேலும நம்மால் வலுவான ஆதாரத்தின் அடிப்படையில் கூற முடியும். அதாவது திருக்குர்ஆனிலுள்ள ஒவ்வொரு சொற்களும் அசல் வடிவில் உள்ளது. அது முஹம்மது (ஸல்) அவர்களால் எழுதுப்பட்டதாகும்.

அடுத்து ஜெர்மனியைச் சேர்ந்த விரிவுரையாளர் நோல்டோக்கே எழுதுகின்றார்: எழுத்துக்களில் ஏதாவது சிறிய தவறு இருக்கலாம். ஆனால் எந்த திருக்குர்ஆனை உஸ்மான் உலகிற்கு முன்னால் வைத்தாரோ அதனுடைய கருத்துக்கள் முஹம்மது (ஸல்) அவர்கள்

**திருக்குர்ஆனிலிருந்து...**

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad
(Naib Sec.Maal, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

பின்னர் நம்பிக்கை கொண்டு நற்செயல்களைச் செய்தவர்களுக்கு அவர்களின் நற்பலன்களை முழுமையாக வழங்குவதுடன் அவன் தனது அருளிலிருந்து அவர்களுக்கு மிகுதியாக வழங்குவான். (4:174)

Mohaideen Ali & M.Sabahul Islam
Melapalayam

முன் வைத்ததே ஆகும். அதன் வரிசைக்கிரமம் வியக்கத்தகதாக இருக்கலாம். திருக்குர்ஆனில் பிற்காலத்திலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்பதை நிரூபிக்க ஐரோப்பியர்கள் செய்த முயற்சியானது தோல்வியுற்றது.

ஆக ஐரோப்பிய எழுத்தாளர்களும் கூட இதனை ஏற்றுக் கொண்டுள்ளனர். திருக்குர்ஆனின் வெளிப்படையான பாதுகாப்பிற்குரிய கேள்வியைப் பொறுத்தவரை இதில் எவ்வித சந்தேகத்திற்கும் இடமில்லை. இன்னும் சொல்வதென்றால், இதிலுள்ள ஒவ்வொரு எழுத்தும், ஒவ்வொரு சொல்லும் முஹம்மது (ஸல்) அவர்கள் மக்களுக்கு படித்துக் காட்டியதே ஆகும்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 8 பக்கம் 421, 422)

ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: மக்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைக் குறித்து அவர் திருக்குர்ஆனை ஒன்றுசேர்த்தவர் என்று கூறுகின்றார். இது தவறாகும். ஆயினும் திருக்குர்ஆனை வெளியிட்டவர் என்று கூறினால் கூட சிறிதளவு ஏற்றுக் கொள்ளலாம். அன்னாரது கிலாஃபத் காலகட்டத்தில் இஸ்லாம் தொலைதூரம் வரை பரவியது. எனவே அன்னார் சில பக்கங்களை நகல் செய்து அதனை மக்கா, மதீனா, சிரியா, பஸ்ரா, கூஃபா மற்றும் பிலாத் ஆகிய இடங்களுக்கு அனுப்பி வைத்தார்கள். அல்லாஹ்வின் விருப்பத்திற்கேற்ப அதன் வரிசைக்கிரமத்திற்கேற்ப ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்தான் இதனை ஒன்றுசேர்த்தார்கள். இறைவனது விருப்பத்தின் வரிசைக்கிரமத்திற்கேற்ப நம் வரை எட்ட வைக்கப்பட்டுள்ளது. ஆயினும் இதனைப் படிப்பதும், இதனை ஒன்று சேர்ப்பதும் நம் அனைவரின் பொறுப்பாகும்.

(ஹகாயிக்குல் ஃபுர்கான் தொகுதி 4 பக்கம் 272)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் காலகட்டத்தில் மக்காவாசிகள் மக்காவில் இருந்தனர், மதீனாவாசிகள் மதீனாவில் இருந்தனர், நஜதைச் சேர்ந்தவர்கள் நஜதில் இருந்தனர். தாயிஃபைச் சேர்ந்தவர்கள் தாயிஃபில் இருந்தனர். யமன்வாசிகள் யமனில் இருந்தனர். மேலும் ஒருவர் மற்றவரின் மொழியை அறியாதவர்களாக இருந்தனர். அவ்வாறிருக்கும்போது மதீனா அரசாங்கத்தின் தலைமையகமாக ஆகிவிட்டது என்றால் அனைத்து சமுதாயங்களும் ஒன்றாக ஆகிவிட்டது. ஏனென்றால் அந்த நேரத்தில் மதீனாவாசிகள் ஆட்சியாளர்களாக இருந்தனர். அவர்களில் ஒரு பெரும் எண்ணிக்கையில் மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்து வந்தவர்கள் இருந்தனர். மேலும் மதீனாவாசிகளும் கூட மக்காவாசிகளின் நெருக்கத்தின் காரணமாக ஹிஜாஸி அரபி மொழியை கற்றுக் கொண்டிருந்தனர்.

ஆக சட்டங்களை நடைமுறைப்படுத்துவது இவர்கள் தரப்பிலிருந்தே இருந்தது. மேலும் எவர்கள் வசம் ஆட்சி இருந்தோ அவர்கள் வசமே செல்வம் இருந்தது. உலகத்தின் பார்வையும் அவர்கள் பக்கமே எழுந்தது. அந்த நேரத்தில் தாஃயிப், நஜத், மக்கா, யமன் மற்றும் மற்ற பகுதிகளைச் சேர்ந்த பெரும்பான்மையான மக்களும் மதீனாவிற்கு வந்து சென்றனர். மேலும் மதீனாவின் ஹிஜ்ரத் செய்த அன்ஸார்களை சந்தித்தனர். மேலும் மார்க்கத்தை கற்றுக் கொண்டனர். இவ்வாறு அனைத்து நாடுகளின் அறிவுசார்ந்த மொழி ஒன்றாக ஆகியிருந்தது. பிறகு இவர்களில் சிலர் மதீனாவிற்கு வந்து குடியேறினர். அவர்களது மொழியும் முற்றிலுமாக ஹிஜாஸியாகவே ஆகிவிட்டது.

அந்த மக்கள் தமது நாட்டிற்கு செல்லும்போது அறிஞர்களாகவும், ஆசியர்களாகவும் இருந்தனர். நிச்சயமாக இவர்கள் தமது இடத்திற்கு செல்கின்றபோது அந்த மக்கள் மீது அதன் தாக்கம் ஏற்பட்டது. அதுமட்டுமின்றி போர்களின் காரணத்தினாலும் அரபின் பல்வேறு சமுதாயங்கள் ஒன்றாக இருக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. அதிகாரிகள் மூத்த சஹாபிகளாக இருந்தனர். ஆக ஆரம்ப காலத்தில் திருக்குர்ஆனின் மொழியை புரியவதில் இவர்களுக்கு கஷ்டங்கள் ஏற்படிருக்கலாம் ஆனால் மதீனா ஆட்சியின் தலைமையகமாக ஆன பிறகு அரபின் தலைமையகமாக மதீனா ஆகிவிட்டது. மேலும் கோத்திரங்கள் மற்றும் சமுதாயதங்கள் மீண்டும் மீண்டும் அங்கு வரத் தெடங்கினர். பிறகு இந்த கருத்து வேறுபாட்டிற்கு எந்த வழிவகையும் இல்லாமல் ஆகிவிட்டது. ஏனென்றால் அந்த நேரத்தில் அறிவார்ந்த மக்கள் திருக்குர்ஆனின் மொழியை நன்று அறிந்தவர்களாக ஆகிவிட்டிருந்தனர்.

மக்கள் அந்த மொழியை நன்கு அறிந்தவர்களாக ஆகிவிட்டிருந்தபோது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், இனி ஹிஜாஸி கிராஅத்தில் படிக்க வேண்டும். வேறு எந்த கிராஅத்திலும் படிப்பதற்கு அனுமதி கிடையாது என்று கட்டளையிட்டார்கள். அன்னாரது இந்த கட்டளைக்கான பொருள் என்னவென்றால், இப்போது மக்கள் ஹிஜாஸி மொழியை அறிந்துள்ளனர். எனவே அவர்கள் ஹிஜாஸி அரபிச் சொற்களை மாற்றி வேறு சொற்களை பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்குவதற்கு எந்த காரணமும் இல்லை.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் இந்த கட்டளையின் காரணமாகவே சன்னிகளின் எதிரிகளாகிய ஷியாக்கள் தற்போதைய திருக்குர்ஆன் உஸ்மான் அவர்களின் குறிப்புகள் ஆகும் என்று கூறுகின்றனர். ஆனால் இந்த ஆட்சேபனை முற்றிலும் தவறாகும். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் காலகட்டத்திற்குள் அரபிகளின் ஒருவர் மற்றவருடனான சந்திப்பானது ஒரு நீண்ட காலத்தை கடந்திருந்தது. இதன் காரணமாக ஒருவர் மற்றவரது மொழியின் வித்தியாத்தை முழுமையாக அறிந்திருந்தார்கள். அந்த நேரத்தில் இவ்விஷயத்திற்காக அதாவது மக்கள் திருக்குர்ஆனை (பல்வேறு) கிராஅத்துகளில் ஓதுவதற்கு அனுமதி வழங்குவதற்கு எந்த அவசியமும் இல்லாமல் இருந்தது. ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த அனுமதி வெறும் தற்காலிக அனுமதியாகவே இருந்தது.

ஆரம்ப காலத்தில் சமுதாயங்கள் பிரிந்திருந்தன. மொழியின் சிறி, சிறு வித்தியாசத்தின் காரணமாக பொருளின் வேறுபாடு ஏற்பட்டு வந்தது. இந்த குறைவின் காரணமாக கோத்திரத்தில் நடைமுறையில் இருந்த சில சொற்களை அசல் வஹீக்கு மாற்றாக இறைவனுடைய வஹீக்கேற்ப படிப்பதற்கு தற்காலிகமாக அனுமதி வழங்கப்பட்டது. திருக்குர்ஆனின் கட்டளைகளை புரிந்து கொள்வது மற்றும் அதன் போதனைகளை அறிந்து கொள்வதில் எந்த தடையும் இருக்கக் கூடாது. மேலும் ஒவ்வொரு மொழியைச் சேர்ந்தவரும் தத்தமது மொழியின் கூற்றிற்கேற்ப அதன் கட்டளைகளை புரிந்து கொள்ள வேண்டும். மேலும் அதற்கேற்ப படிக்க வேண்டும் என்பதற்காக அந்த அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இந்த அனுமதி வழங்கப்பட்டு 20 ஆண்டுகள் கடந்த பிறகு

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad (Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam (Qaid, Melapalayam)

காலமானது ஒரு புதிய வடிவத்தைப் பெற்றிருந்தது. சமுதாயங்கள் ஒரு புதிய தோற்றத்தை பெற்றன. பல்வேறு கோத்திரங்களாக பிரிந்திருந்த அரபிகள் ஒரு சிறந்த சமுதாயமாக இன்னும் சொல்வதென்றால், ஒரு சிறந்த அரசாங்கமாக மாறியிருந்தனர். இதற்குப் பிறகு திருக்குர்ஆனின் அசல் மொழியை புரிந்து கொள்வதில் மக்களுக்கு எந்த கஷ்டமும் இருக்கவில்லை. இந்த நிலைமை ஏற்பட்டதும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், காலத்தின் சூழ்நிலைக்கேற்ப தற்காலிகமாக கொடுக்கப்பட்டிருந்த அந்த அனுமதியை ரத்து செய்து விட்டார்கள். மேலும் இதுவே அல்லாஹ்வின் விருப்பமாக இருந்தது. ஆனால் ஷியாக்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் மிகப்பெரிய தவறாக ஒன்றை குறிப்பிடுகின்றார்கள் என்றால் அது இதுவாகும். அதாவது அன்னார் பல்வேறு கிராஅத்துக்களை அழித்து விட்டு ஒரேயொரு கிராத்தை மட்டும் தொடரச் செய்தார்கள்.

ஆனால் அவர்கள் சிந்தித்து பார்த்தால் அவர்கள் எளிதாக புரிந்து கொள்ளலாம். அதாவது இறைவன் பல்வேறு கிராஅத்துகளில் திருக்குர்ஆனை படிப்பதற்கான அனுமதியை இஸ்லாத்தின் இரண்டாவது காலகட்டத்தில் வழங்கினான். ஆரம்ப காலகட்டத்தில் வழங்கவில்லை. இதன் தெளிவான பொருள் என்னவென்றால், திருக்குர்ஆன் ஹிஜாஸி மொழியில் அருளப்பட்டிருந்தாலும் திருக்குர்ஆன் கிராஅத்துகளில் ஏற்பட்ட வித்தியாசம் என்பது மற்ற கோத்திரங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகே ஏற்பட்டது. சில முறை ஒரு கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் தமது மொழியின் அடிப்படையில் மற்றொரு கோத்திரத்தைச் சேர்ந்தவர்களை விட சரியான முறையில் உச்சரிக்க முடியாமல் இருந்தனர். அல்லது அந்த சொல்லின் பொருளின் அடிப்படையில் வித்தியாசம் இருந்தது.

எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் விருப்பத்திற்கேற்ப சில கருத்து வேறுபாடுள்ள சொற்களின் உச்சரிப்பை மாற்றுவது மற்றும் அதற்கு பதிலாக மற்றொரு சொல்லை பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கினார்கள். ஆனால் அதனால் வசனத்தின் பொருளில் அல்லது கருத்தின் பொருளில் எந்த தாக்கமும் ஏற்படவில்லை. இன்னும் சொல்வதென்றால், இந்த அனுமதியை வழங்காமல் இருந்திருந்தால் தான் வித்தியாசம் ஏற்பட்டிருக்கும்.

இதற்கான ஆதாரம் இதிலிருந்து கிடைக்கிறது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு சூராவை ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மசூது அவக்ளுக்கு வேறு விதமாகவும், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு வேறு விதமாகவும் கற்றுக் கொடுத்தார்கள். ஏனென்றால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் நகர்ப்புறத்தைச் சேர்ந்தவராக இருந்தார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மசூது கிராமப்புறவாசி ஆவார். எனவே அதன் காரணமாக காட்டரபியைச் சேர்ந்த மக்களுடன் அவருக்கு அதிகமான தொடர்பு இருந்தது. இரண்டு மொழிகளிலும் அதிக வித்தியாசம் இருக்கின்றது.

ஒரு நாள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மசூது (ரலி) அவர்கள் திருக்குர்ஆனின் அந்த சூராவை படித்துக் கொண்டிருக்கும்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்த வழியாக கடந்து சென்றார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மசூது அவர்கள் ஓதுவதில் வித்தியாசத்தைக் கண்ட ஹஸ்ரத் உமர் அவர்கள் வியப்படைந்தவாறு, இது என்ன? சொற்கள் வேறொன்றாக இருக்கிறது. நீங்கள் வேறொன்றை படிக்கின்றீர்கள் என்று கேட்டார்கள்.

எனவே அவர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மசூது (ரலி) அவர்களிடம், வாருங்கள். ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் இப்போதே உங்களது விவகாரத்தை முன் வைக்கின்றேன். உண்மையான சூரா இவ்வாறிருக்கும்போது நீங்கள் இவ்வாறு மாற்றி சில சொற்களை படிக்கின்றீர்கள் என்று கூறுவேன் என்று கூறினார்கள். எனவே அவர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அழைத்து வந்தார்கள். மேலும் அன்னாரிடம், யா ரஸூலல்லாஹ் (ஸல்)! தங்கள் எனக்கு இந்த சூராவை இவ்வாறு கற்றுக் கொடுத்தீர்கள். ஆனால் அப்துல்லாஹ் பின் மசூது அவர்கள் இவ்வாறு ஓதுகின்றார் என்று கூறினார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் அப்துல்லாஹ் பின் மசூது (ரலி) அவர்களிடம் நீங்கள் இந்த சூராவை எவ்வாறு ஓதினீர்கள் என்று கேட்டார்கள். அன்னார் தம்மிடம் தவறு ஏற்பட்டு விட்டதோ என்று அஞ்சினார்கள். மேலும் நடுங்கினார்கள். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அஞ்சாதீர்கள். ஓதுங்கள் என்று கூறினார்கள். அப்போது அன்னார் ஓதிக் காட்டினார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இது முற்றிலும் சரியாகும் என்று கூறினார்கள்.

அதற்கு உமர் (ரலி) அவர்கள், யா ரஸூலல்லாஹ் (ஸல்)! தாங்கள் எனக்கு இவ்வாறு கற்றுக் கொடுத்தீர்கள் என்று கூறினார்கள். அதற்கு அன்னார் (ஸல்) அவர்கள், அதுவும் சரிதான் என்று கூறினார்கள். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: திருக்குர்ஆன் ஏழு கிராஅத்துகளில் அருளப்பட்டுள்ளது. நீங்கள் இந்த சின்னஞ்சிறு விஷயங்களில் ஒருவருக்கொருவர் சண்டையிடாதீர்கள்.

இந்த வித்தியாசத்தின் உண்மையான காரணம் என்னவென்றால், அப்துல்லாஹ் பின் மசூது கிராமப்புறவாசியாக இருந்ததால் அவர்களது உச்சரிப்பு வேறொன்றாக இருந்தது. எனவே எந்த உச்சரிப்பின் அடிப்படையில் கிராஅத் செய்யப்பட்டதோ அதற்கேற்ப அவர்களுக்கு ஓதிக் கொடுக்கவில்லை. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் நகர்ப்புறவாசியாக இருந்ததால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாருக்கு சரியான மக்காவின் மொழியில் அருளப்பட்ட கிராஅத்தை கற்றுக் கொடுத்தார்கள். எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மசூது அவர்களுக்கு அவர்களது மொழியிலேயே சூராவை ஓதுவதற்கான அனுமதியை வழங்கினார்கள். மேலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு தூய நகர்ப்புற மொழியில் சூராவை கற்றுக் கொடுத்தார்கள். பல்வேறு கிராஅத்துகளின் காரணமாக இத்தகைய சிறிய சிறிய வித்தியாசங்கள் ஏற்பட்டு வந்தன. ஆனால் அதன் மையக் கருத்தில் எவ்வித தாக்கமும் ஏற்படவில்லை. நாகரீகம், கல்வி மற்றும் மொழியிலுள்ள வித்தியாசம் ஒரு இயல்பான ஒன்று தான் என்று ஒவ்வொரு நபரும் புரிந்து கொண்டிருந்தார்.

பின்னர் அன்னார் கூறுகின்றார்கள்: நாகரீகம் மற்றும் அரசாங்கத்தின் மூலமாக கோத்திரமானது ஒரே சமுதாயம் மற்றும் ஒரே மொழி என்று மாறியது. அனைத்து மக்களும் ஹிஜாஸி மொழியை நன்கு அறிந்தவர்களாக ஆகிவிட்டனர். எனவே உஸ்மான் அவர்கள் சரியாக புரிந்து கொண்டார்கள் அதாவது இந்த கிராஅத்துகளை நிலைபெற விடுவது கருத்து வேறுபாடுகளை ஏற்படுத்துவதற்கு காரணியாக அமைந்து விடும். எனவே இந்த கிராஅத்துகளின் பொதுவான பயன்பாட்டை தற்போது தடுத்து நிறுத்த வேண்டும் என முடிவெடுத்தார்கள்.

ஆக அன்னார் இந்த நல்லெண்ணத்தின் அடிப்படையில் பொதுவான வழக்கில் ஹிஜாஸி கிராஅத்தைத் தவிர மற்ற அனைத்து கிராஅத்துகளை ஓதுவதிலிருந்து தடை செய்து விட்டார்கள். மேலும் அரபிகள் மற்றும் அரபி அல்லாதவர்களை ஒரே கிராஅத்தில் ஒன்றுகூட்டுவதற்காக எப்படிப்பட்ட பிரதிக்கு அனுமதி வழங்கினார்கள் என்றால் அது ஹிஜாஸியாகவும், ஆரம்ப காலத்தில் ஓதப்பட்ட கிராஅத்திற்கு ஏற்பவும் இருந்தது.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 9 பக்கம் 49–51)

கொஞ்சம் நற்குறிப்பு எஞ்சியுள்ளது. இன்ஷா அல்லாஹ் எதிர்காலத்தில் (தொடரும்). இன்றும் நான் பாகிஸ்தானிற்காகவும், அல்ஜீரியா அஹ்மதிகளுக்காகவும் துஆவிற்காக கூற விரும்புகின்றேன். உலகின் ஒவ்வொரு இடத்திலும் எங்கெல்லாம் அஹ்மதிகள் கஷ்டங்களில் சிக்கியுள்ளார்களோ அவர்களுக்காக துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களின் கஷ்டங்களை அகற்றுவானாக. குறிப்பாக பாகிஸ்தானில் சட்டத்தின் காரணமாக பல்வேறு நேரங்களில் நெருக்கடிகள் கொடுக்கப்படுகின்றன. தற்போது அவர்கள் எந்த நிலையிலும் அவர்களுக்கு சுதந்திரம் இல்லை. அதேபோன்று அல்ஜீரியாவிலும் சில அரசாங்க அதிகாரிகள் நெருக்கடிகள் கொடுக்கின்றனர். அல்லாஹ் அஹ்மதிகளை இந்த அனைத்து கஷ்டங்களிலிருந்தும் இரட்சிப்பை வழங்குவானாக.

ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு நான் website ஒன்றையும் தொடங்கி வைப்பேன். அது சீன Desk-ன் website ஆகும். தலைமையக IT குழுவின் ஒத்துழைப்புடன் இந்த வலைதளம் உருவாக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து மக்களுக்கு சீன மொழியில் இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத் தொடர்பான விரிவான தகவல்கள் கிடைக்க முடியும். இந்த வலைதளத்தை ஜமாஅத்தின் முக்கிய வலைதளமான alislam மூலமாகவும் தனியாகவும் பார்க்க முடியும். அதில் பல்வேறு தலைப்புகளின் கீழ் கட்டுரைகள் பதியப்பட்டுள்ளன. திருக்குர்ஆனின் சீன மொழியாக்கத்தின் புதிய பதிப்பும் அதில் இடம் பெற்றுள்ளது. அதுமட்டுமின்றி 30 ஏனைய புத்தகங்களும் பிரசுரங்களும் இடம் பெற்றுள்ளன. கேள்வி பதில் நிகழ்ச்சியின் கீழ் பல்வேறு கேள்விகளுக்கான பதிலும் தரப்பட்டுள்ளன.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்ற தலைப்பில் ஹுஸூர் (அலை) அவர்களைப் பற்றியும், கலீஃபாக்களைப் பற்றியும் அறிமுகம் கொடுக்கப்பட்டுள்ளது. முதல் பக்கத்தில் ஜமாஅத்தின் ஏனைய 6 website–களின் Link–களும் கொடுக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமின்றி தொடர்பு கொள்வதற்காக தொலைபேசி மற்றும் Fax, email ஆகியவற்றின் விவரங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த வலைதளம் சீன மக்களின் நேர்வழிக்கு காரணியாக அமையவும், இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்திற்காக அவர்களின் உள்ளங்கள் திறப்பதற்கும் இறைவன் வழி செய்வானாக.

இதுமட்டுமின்றி சில ஜனாஸா தொழுகைகளையும் நான் தொழ வைப்பேன். முதலாவது ஜனாஸா ஜமாஅத்தின் முரப்பி மதிப்பிற்குரிய முஹம்மது யூனுஸ் காலித் சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் மார்ச் மாதம் 15 ஆம் தேதி இதயத்துடிப்பு நின்று போனதன் காரணமாக தமது 67 வது வயதில் வஃபாத்தாகி விட்டார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّاۤ اِلَیۡہِ رَاجِعُوۡنَ

முஹம்மது யூனுஸ் காலித் சாஹிப் அவர்களின் பாட்டனார் ஹஸ்ரத் மியான் முராத் பக்ஷ் சாஹிப் மற்றும் அன்னாருடைய சகோதரர் ஹஸ்ரத் ஹாஜி அஹ்மது சாஹிப் (ரலி) ஆகியோர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபிகளைச் சார்ந்தவர்கள் ஆவர். 6 நபர்களைக் கொண்ட குழு மோசூபிரேம்கோட் ஹாஃபிஸாபாத் என்ற ஊரிலிருந்து நடந்தே காதியான் சென்றடைந்தது. இக்குழுவில் ஹஸ்ரத் ஹாஜி அஹ்மது சாஹிப் அவர்களும் இடம் பெற்றிருந்தார்கள். அன்னார் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் பைஅத் செய்தார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடமிருந்து தபருக்கன் (பரக்கத்திற்காக) தண்ணீர் வேண்டினார்கள். ஹுஸூர் (அலை) அவர்களும் வழங்கினார்கள்.

மதிப்பிற்குரிய யூனுஸ் காலித் சாஹிப் அவர்கள் ரப்வாவிலிருந்து மெட்ரிக் கல்வி பயின்றார்கள். அதன் பிறகு ஜாமிஆவில் சேர்ந்தார்கள். ஜாமிஆவில் படித்துக் கொண்டிருக்கும்போது அரபி ஃபாஸில் பட்டமும் பெற்றார்கள். அல்லாஹ்வின் அருளால் மூஸியாக இருந்தார்கள். 1980 ஆம் ஆண்டு ஜாமிஆ அஹ்மதிய்யாவிலிருந்து ஷாஹித் பட்டம் பெற்றார்கள். பின்னர் 40 ஆண்டுகள் வரை பல்வேறு இடங்களில் பாகிஸ்தானிலும், வெளிநாடுகளிலும், ஆஃப்ரிக்காவிலும் ஜமாஅத்திற்கு தொண்டாற்றும் நற்பாக்கியம் அன்னாருக்கு கிடைத்து. அன்னாரின் உறவினர்களில் அன்னாரின் மனைவி மர்யம் சித்திக்கா சாஹிபா அவர்களும், ஜமாஅத்தின் முரப்பியான அதீக் அஹ்மது முபஷ்ஷிர் என்ற அன்னாரின் ஒரு மகனும் உள்ளனர்.

அதீக் அஹ்மது முபஷ்ஷிர் சாஹிப் அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: என்னுடைய தந்தை செயல்நிலை கொண்ட ஓர் அறிஞர் ஆவார்கள். இறைவன் ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுடன் நடந்தது போன்றே என்னுடன் நடந்து கொண்டுள்ளான். எனக்கு என்ன தேவை ஏற்பட்டாலும் அல்லாஹ் தனது அருளால் அதனை முழுமை செய்து விடுவான் என்று பெரும்பாலும் என்னிடம் கூறி வந்தார்கள். அதனை நானும் பல முறை கண்ணால் கண்டுள்ளேன்.

பின்னர் ரானா முபாரக் அஹ்மது சாஹிப் லாஹூரில் ஒரு ஹல்காவின் சதராக இருந்தார்கள். அன்னார் கூறியதாக அன்னாரின் மகன் எழுதுகின்றார்கள்: எப்போது ஜமாஅத் பணி வந்தாலும் மதிப்பிற்குரிய முரப்பி சாஹிப் அவர்கள் உடனே அதனை செய்து முடித்து விடுவார்கள். காலணி அணிந்திருக்கின்றோமா? இல்லையா? என்பதைக் கூட அவர்கள் பொருட்படுத்த மாட்டார்கள். உடனடியாக வேகத்துடன் பணியாற்ற புறப்பட்டு விடுவார்கள். பொருள் தியாகத்தில் போட்டி போட்டுக் கொண்டு பங்கு பெற்று வந்தார்கள்.

ஹரீபூர் ஹஸாரா என்ற இடத்தின் அமீர் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: முரப்பி சாஹிப் அவர்கள் தர்பீலா எனும் முழு ஜமாஅத்திற்கும் ஒரு முன்னுதாரணமாக சந்தா கொடுப்பதில் திகழ்ந்தார்கள். மரணித்த சான்றோர்களின் பெயரிலும் தொடர்ந்து சந்தா செலுத்தி வந்தார்கள்.

அன்னாரின் சகலை கூறுகின்றார்கள்: சந்தாக்களின் விவகாரங்களில் மிகவும் விழிப்புடன் இருந்தார்கள். குறிப்பாக தனது வஸிய்யத்தின் சந்தாக்களை நிறைவேற்றுவதில் கவனமாக இருந்து வந்தார்கள். மர்ஹூம் மிகவும் துஆ செய்யக் கூடியவராகவும், எளிமையான நபராகவும் இருந்தார்கள். மர்ஹூம் ஏழைகளைத் தேடி இரகசியமாக பொருள் உதவி செய்து வந்தார்கள். உறவினர்களில் ஏழை பெண் பிள்ளைகளின் திருமண சந்தர்ப்பத்தில் சீதனமாக பொருட்கள் வாங்கி கொடுத்து வந்தார்கள். நாங்கள் ஒரு கலப்பற்ற, பொருள் உதவி செய்யக்கூடிய அன்பிற்குரிய மற்றும் பரிவுமிக்க ஒருவரை இழந்து விட்டோம் என்று உறவினர்கள் கூறுகின்றனர். அல்லாஹ் மர்ஹூமுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக.

இரண்டாவது ஜனாஸா ஐவெரிகோஸ்டைச் சேர்ந்த டாக்டர் நிஸாமுத்தீன் சாஹிப் புதன் அவர்களுடையதாகும். அன்னார் மார்ச் மாதம் 15 ஆம் தேதி 73 வது வயதில் மரணமடைந்து விட்டார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّاۤ اِلَیۡہِ رَاجِعُوۡنَ

அன்னார் தனது துவக்க கல்வியை மொரீஷியஸ் நாட்டில் பெற்றார்கள். 1968 ஆம் ஆண்டில் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் அன்னாருக்கு ஸ்காலர்ஷிப் கொடுத்தார்கள். அன்னார் பாகிஸ்தானிற்கு வருகை தந்து முதலில் FSC பட்டத்தை தஃலீமுல் இஸ்லாம் கல்லூரியிலிருந்து பெற்றார்கள். பின்னர் மருத்துவ கல்லூரியில் சேர்ந்தார்கள். மேலும் Dow Medical college லிருந்து MBBS பட்டம் பெற்றார்கள். 1978 ஆம் ஆண்டில் ஹஸ்ரத்

மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் நைஜீரியாவிலுள்ள அஹ்மதிய்யா Clinic-ன் இன்சார்ஜாக நியமனம் செய்தார்கள். 1984 ஆம் ஆண்டு வரை அங்கு தொண்டாற்றும் நற்பாக்கியம் பெற்றார்கள்.

1980 ஆம் ஆண்டில் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் கானா சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தார்கள். அந்த சந்தர்ப்பத்தில் ஐவெரிகோஸ்ட் ஜமாஅத்தின் குழுவினர் கானா வந்தடைந்து ஹுஸூர் அவர்களை சந்திக்கும் பாக்கியம் பெற்றார்கள். எவ்வாறு அஹ்மதிய்யா ஜமாஅத் கானாவில் மருத்துவமனை உள்ளதோ அதேபோன்று எங்களுடைய ஐவெரிகோஸ்ட் நாட்டிலும் திறக்கப்பட வேண்டுமென அக்குழுவினர் ஹுஸூர் அவர்களிடம் விண்ணப்பித்தார்கள். எவ்வாறிருப்பினும் ஹுஸூர் அவர்களும் அதற்கு ஒப்புதல் வழங்கினார்கள். அதற்கான நடவடிக்கைகளை துவங்கினார்கள். டாக்டர் சாஹிப் அவர்கள் 1983 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் தேதி லேகோஸ் என்ற இடத்திலிருந்து ஐவெரிகோஸ்ட் சென்றடைந்தார்கள். சுகாதாரத்துறை அதிகாரிகளை சந்தித்தார்கள். ஏனென்றால் அன்னார் பிரெஞ்சு மொழி அறிந்திருந்தார்கள். பிரெஞ்சு மருத்துவர்களின் தேவை இருந்தது. எனவே நைஜீரியாவிலிருந்து அங்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். மேலும் அங்கு அஹ்மதிய்யா dispensary தொடங்குவதற்கும் அனுமதி வழங்கப்பட்டது.

1984 ஆம் ஆண்டிலிருந்து மரணம் வரை அன்னார் ஐவெரிகோஸ்டில் தொண்டாற்றும் நற்பாக்கியம் பெற்று வந்தார்கள். அல்லாஹ்வின் அருளால் மூஸியாக இருந்தார்கள். அன்னாரின் மனைவியும் மரணமடைந்து விட்டார்கள். பஷீருத்தீன் மஹ்மூத் புதன் என்ற ஒரு மகனும், நாஷ்மியா ஆயிஷா முபாரக்கா என்ற ஒரு மகளும் அன்னாருக்கு உள்ளனர். அல்லாஹ் இந்தப் பிள்ளைகளையும் கிலாஃபத் மற்றும் ஜமாஅத்துடன் இணைத்து வைப்பானாக.

ஐவெரிகோஸ்ட்டின் அமீர் மற்றும் மிஷனரி இன்சார்ஜ் அப்துல் கய்யூம் பாஷா சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: ஐவெரிகோஸ்டில் சுமார் 36 ஆண்டுகள் அஹ்மதிய்யா Clinic ஆபிகான் எனும் இடத்தில் அன்னார் மருத்துவ அதிகாரியாக தொண்டாற்றியுள்ளார்கள். அன்னார் ஒரு மிகச்சிறந்த மருத்துவதும், ஒரு சிறந்த மனிதரும், ஐவெரிகோஸ்ட் ஜமாஅத்தின் மிகச்சிறந்த உறுப்பினரும் ஆக இருந்தார்கள். எனக்கு டாக்டர் சாஹிப் அவர்களுடன் சுமார் 18 ஆண்டுகள் தொடர்பு இருந்தது. அன்னாரை நான் எல்லா வகையிலும் நல்ல மனிதராக கண்டேன். அனைவருக்கும் உதவி செய்யக் கூடியவராகவும், ஜமாஅத்தின் பணிகளில் ஆலோசனை வழங்கக் கூடியவராகவும், விருந்து உபசரிப்பு செய்பவராகவும், நற்பண்பு கொண்ட மனிதராகவும், இனிமையாக பேசக்கூடிய மனிதராகவும் அன்னார் திகழ்ந்தார்கள்.

ஜமாஅத்தில் பல்வேறு பொறுப்புகளை அன்னார் வகித்து வந்தார்கள். மிகவும் கருணை உள்ளம் கொண்ட மனிதராக இருந்தார்கள். குழந்தைகளுடன் மிகவும் அன்புடனும், நேசத்துடனும் நடந்து வந்தார்கள். பெரும்பாலும் குழந்தைகளுக்கு அன்பளிப்பாக கொடுப்பதற்கு Clinic-ல் எதையாவது வைத்திருப்பார்கள். நோயாளியாக சிறு குழந்தைகள் வந்தால் அவர்களுக்கு அன்பளிப்பு கொடுத்து வந்தார்கள். பொம்மைகள் மற்றும் சாக்லேட் ஆகியவற்றை கொடுத்து வந்தார்கள். மிஷன் ஹவுஸில் தங்கி வந்த மாணவர்கள் மற்றும் ஏழை அஹ்மதிகளின் குடும்பங்களுக்கு மிகவும் உதவி செய்து வந்தார்கள்.

அங்குள்ள ஒரு முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்: தம்மிடத்தில் நோயாளிகள் யாரும் வரவில்லை என்றால் அந்த நேரத்தில் அன்னார் ஏதாவதொரு காதிம் அல்லது நாஸிருக்கு தஃலீம் மற்றும் தர்பிய்யத் பணியில் மும்முரமாக மர்ஹூம் இருந்து வருவார்கள். நோயாளி வரவில்லை என்று வீணாக அமர்ந்து இருக்க மாட்டார்கள். ஜமாஅத்தின் ஏதாவதொரு பணியில் தம்மை மும்முரமாக வைத்துக் கொள்வார்கள். இது தொடர்பாக சில முறை மல்ஃபூஸாத் அல்லது குத்பா ஜுமுஆவின் பிரெஞ்சு மொழியாக்கத்தை செய்து வந்தார்கள். ஜமாஅத் உறுப்பினர்களுக்கு அதன் நகல்களை எடுத்து அனுப்பி வந்தார்கள். எப்போதும் அன்னார் மனித இனத்திற்கு தொண்டாற்றுவதற்கு ஆயத்தமாக இருந்து வந்தார்கள். நோயாளிகளுக்கு அன்னார் சுயமே மருந்துகளை வாங்கிக் கொடுத்து வந்தார்கள். சில முறை ஏழைகளுக்கும் மருந்துகளை கொடுத்து வந்தார்கள். சில முறை அந்த ஏழை நோயாளிகளின் வீட்டுத் தேவைகளுக்குரிய பொருட்களை உதாரணமாக, அரிசி, எண்ணெய் போன்ற பொருட்களையும் அன்னார் வழங்கி வந்தார்கள். அல்லாஹ் மர்ஹூமுடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக.

அடுத்த ஜனாஸா டாக்டர் ராஜா நஸீர் அஹ்மது ஜஃபர் சாஹிப் அவர்களின் மனைவியாகிய சல்மா பேகம் சாஹிபா அவர்களுடையதாகும். அன்னார் ஜனவரி மாதம் 24 ஆம் தேதி தமது 85 வது வயதில் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

அன்னாரின் தந்தை ராஜா ஃபஸல் தாத் கான் சாஹிப் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் தனது குடும்பத்தில் முதல் அஹ்மதியாக இருந்தார்கள். அன்னாரைப் பற்றி எழுதக்கூடியவர்களும், அன்னாரின் பிள்ளைகளும் இந்த விஷயங்களை எழுதியுள்ளனர். அதாவது அன்னார் நீண்ட நேரம் தொழுது வந்தார்கள். குடும்பத்தில் அன்னார் இந்த வகையில் மிகவும் பிரபல்யமானவராக இருந்தார்கள். மிகவும் நற்பண்பு கொண்டவராகவும், தொண்டாற்றக் கூடியவராகவும், இறையச்சமிக்கவராகவும், நன்றியுணர்வு கொண்டவராகவும், தைரியசாலியாகவும், கண்ணியமிக்கவராகவும், நுட்பமான ஞானம் கொண்டவராகவும், சுயமரியாதை கொண்டவராகவும், மிகவும் துஆ செய்யக் கூடியவராகவும், மிகவும் பொறுமை செய்யக்கூடிய மற்றும் நன்றியுணர்வுமிக்க பெண்மணியாகவும், அல்லாஹ்வின் மீது அதிகமாக நம்பிக்கை கொண்ட பெண்மணியாகவும் இருந்தார்கள்.

மர்ஹூமா அல்லாஹ்வின் அருளால் மூஸியாக இருந்தார்கள். அன்னார் தமக்குப் பிறகு இரண்டு மகன்களையும், மூன்று மகள்களையும் விட்டுச் சென்றுள்ளார்கள். அல்லாஹ் மர்ஹூமாவுடன் கருணை மற்றும் பாவ மன்னிப்புடன் நடந்து கொள்வானாக.

அடுத்த ஜனாஸா யூ.கே வைச் சேர்ந்த அப்துல் பாகி அர்ஷத் சாஹிப் அவர்களின் மனைவியாகிய மதிப்பிற்குரிய கிஷ்வர் தன்வீர் ராஷித் சாஹிபா அவர்களுடையதாகும். அன்னார் பிப்ரவரி மாதம் 27 ஆம் தேதி தனது 87 வது வயதில் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

மர்ஹூமா மிகவும் பொறுமைமிக்கவராகவும், தைரியத்துடனும் தனது நோயையும், முதுமையின் பல்வேறு காலகட்டங்களையும் எதிர்கொண்டார்கள். இறைவனின் திருப்தியில் திருப்தி கொண்டவாறு தனது அன்பிற்குரிய இறைவனின் சமூகத்தில் ஆஜராகி விட்டார்கள். தனக்குப் பிறகு அன்னார் தமது இரண்டு மகன்களையும், இரண்டு மகள்களையும் அதேபோன்று மகன்வழி பேரன்களையும், பேத்திகளையும், மகள்வழி பேரன்களையும், பேத்திகளையும் தமது நினைவாக விட்டுச் சென்றுள்ளார்கள். அன்னாரின் ஒரு மருமகனான நஸீருத்தீன் சாஹிப் அவர்கள் யூ.கே

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 6 Thursday 06 May 2021 Issue No. 18

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

ஜமாஅத்தின் நாயிப் அமீராக தொண்டாற்றும் நற்பாக்கியம் பெற்று வருகின்றார்கள். நபீல் அர்ஷத் என்ற ஒரு மகன் இருக்கின்றார். அவருக்கும் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் காலத்தில் தொண்டாற்றும் நற்பாக்கியம் கிடைத்துள்ளது. நானும் அவர்களை எப்பொழுதெல்லாம் ஒரு தொண்டிற்காக அழைத்தாலும் உடனடியாக ஆஜராகி விடுவார்கள். அன்னார் பிள்ளைகளுக்கு நல்ல தர்பிய்யத் வழங்கியுள்ளார்கள்.

மர்ஹூமா எண்ணற்ற சிறப்புகளுக்கு எஜமானி ஆக இருந்தார்கள். தூய்மையை மிகவும் விரும்பக்கூடியவராக இருந்தார்கள். ஒழுங்கு முறையை பேணக்கூடியவராக இருந்தார்கள். அர்ப்பணிப்புமிக்க கலப்பற்ற நல்ல பெண்மணியாக இருந்தார்கள். தொழுகையையும், நோன்பையும் பேணக் கூடியவராகவும், சந்தா கொடுப்பதில் வேகமாக செயல்படக் கூடியவராகவும் இருந்தார்கள். எப்போதும் திறந்த மனதுடன் தான தர்மங்கள் செய்து வந்தார்கள்.

அர்ஷத் பாக்கி சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: அன்னார் ஒரு நீண்ட காலமாக லண்டனில் தங்கி இருந்தார்கள். 1984 ஆம் ஆண்டில் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் லண்டனிற்கு ஹிஜ்ரத் செய்து வந்த பிறகு என்னுடன் ஜமாஅத் பணிகளில் மிகவும் ஒத்துழைப்பு வழங்கி வந்தார்கள். எப்போதும் ஜமாஅத்தின் தொண்டுகளுக்கு முன்னுரிமை வழங்கி வந்தார்கள். தனது குடும்பத்தை எல்லா வகையிலும் ஒரு அமைதி நிறைந்த மற்றும் சொர்க்கத்திற்கு ஒப்பானதாக ஆக்கி வைத்தார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் இவ்வாறு கூறி வந்தார்கள்: அமைதியின் அடிப்படையில் இது எனக்கு மிகவும் பிடித்த குடும்பமாகும்.

எல்லா நிலையிலும் இறைவனுக்கு நன்றி செலுத்தி வந்தார்கள். துன்பம், மகிழ்ச்சி இரண்டு நிலைகளிலும் இறைநியதியை மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டார்கள். ஒருபோதும் நாவில் எந்த முறையீட்டிற்கும் இடம் கொடுக்கவில்லை. சவூதி அரேபியாவிலும் அன்னார் தங்கியிருந்தார்கள். அங்கும் ஹஜ் அல்லது உம்ரா செய்வதற்காக சென்ற அஹ்மதிகளுக்கு தொண்டாற்றுவதற்கு அன்னார் பாக்கியம் பெற்றார்கள். அல்லாஹ் மர்ஹூமாவுடன் கருணை மற்றும் பாவமன்னிப்புடன் நடந்து கொள்வானாக.

அடுத்த ஜனாஸா சூடானைச் சேர்ந்த அப்துர் ரஹ்மான் ஹுஸைன் முஹம்மது கைர் சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் டிசம்பர் மாதம் 24 ஆம் தேதி 56 வது வயதில் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அறிமுகம் கிடைக்கப் பெறுவதற்கு முன்பு எந்தவொரு இஸ்லாமிய பிரிவிலும் அன்னார் இணைந்திருக்கவில்லை. இன்னும் கூறப்போனால் அன்னாருக்கு சில கொள்கைகளில் உதாரணமாக, நாஸிக், மன்ஸூக் மற்றும் ஜின் போன்றவற்றைப் பற்றி ஐயம் இருந்தது. அன்னாரின் மூத்த சகோதரர் உஸ்மான் ஹுஸைன் சாஹிப் சவூதி அரேபியாவில் பணி செய்து வந்தார்கள். அங்கு அன்னாருக்கு ஜமாஅத்தைப் பற்றிய அறிமுகம் ஏற்பட்டது. அன்னார் மர்ஹூம் அப்துர் ரஹ்மான் சாஹிப் அவர்களிடம் அது பற்றி கூறினார்கள். இது 2007 ஆம் ஆண்டு நடந்த விஷயமாகும். தனது சகோதரரிடமிருந்து அஹ்மதிய்யத்தைப் பற்றி கேட்டவுடன் அப்துர் ரஹ்மான் சாஹிப் அவர்கள் MTA பார்ப்பதற்கு நிம்மதியிழந்து விட்டார்கள். அப்போது அவர்களின் பகுதியில் MTA ஒளிபரப்பு கிடைப்பது மிகவும் கடினமாக இருந்தது. MTA பார்ப்பதற்காக பல டிஷ் ஆண்டனாவை அன்னார் மாத்தினார்கள். பெருமளவு பணம் செலவழித்தார்கள். இறுதியில் அவர்களுக்கு MTA கிடைத்து விட்டது. அதன் பிறகு பணியிலிருந்து திரும்பி வந்த பிறகு பெரும்பாலான நேரத்தை MTA பார்ப்பதில் கழித்து வந்தார்கள். அது அன்னாரின் நடைமுறையாக இருந்து வந்தது. இறுதியில் மன நிறைவு ஏற்பட்டவுடன் 2010 ஆம் ஆண்டு அன்னாருக்கு பைஅத் செய்யும் நற்பாக்கியம் கிடைத்தது. பைஅத் செய்த பிறகு அன்னார் தனது அனைத்து உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் தப்லீக் செய்தார்கள்.

மர்ஹூமின் நற்பண்புகளில் பணிவும், தாழ்மை குணமும், விருந்து உபசரிப்பும், ஏழைகளை கருத்தில் கொள்வதும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. 2013 ஆம் ஆண்டில் சூடான் நாட்டில் ஜமாஅத் நிலைநாட்டப்பட்ட பணிகளில் முக்கிய பங்கு ஆற்றுவதற்கு அன்னாருக்கு நற்பாக்கியம் கிடைத்தது. அந்த வகையில் அன்னார் எல்லையற்ற பொருள் தியாகமும் செய்திருந்தார்கள். மர்ஹூம் ஏராளமான ஏழைகளுக்கும், ஜமாஅத் உறுப்பினர்களுக்கும் பொருள் உதவி செய்து வந்தார்கள்.

சூடான் நாட்டின் ஒரு பகுதியில் வசித்து வந்த மிகவும் ஏழை கோத்திரத்தைச் சேர்ந்த ஓர் அஹ்மதியை சக நாட்டினர் அநீதிக்கு இலக்காக்கினார்கள். அப்போது மர்ஹூம் திறந்த மனதுடன் அவருக்கு உதவி செய்தார்கள். அவரின் தேவைகளை கருத்தில் கொண்டார்கள். மேலும் பல மக்களையும் கருத்தில் கொண்டு வந்தார்கள்.

ஒவ்வொரு ஜுமுஆ நாளன்றும் தனது வாகனத்தில் பல்வேறு இடங்களிலிருந்து அஹ்மதிகளை தொழுகை சென்டர்களுக்கு அழைத்து வந்தார்கள். ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு அவர்களை திரும்பி வீட்டிற்கு கொண்டு சேர்ப்பார்கள். ஜமாஅத் அல்லாத நபர்களும் அன்னாரின் நல்லொழுக்கத்தை பாராட்டுகின்றனர். சந்தாக்களில் மிகவும் முறையாக செயல்பட்டவராகவும், மனம் திறந்து செலவு செய்யக் கூடியவராகவும் அன்னார் இருந்தார்கள். சூடான் நாட்டின் முதல் மஜ்லிஸே ஆமிலாவிலும் பணியாற்றும் பாக்கியம் அன்னாருக்கு கிடைத்து வந்தது. இறுதி வரை அன்னார் இந்த பொறுப்பை நிறைவேற்றி வந்தார்கள். மர்ஹூம் தனது நினைவாக ஒரு மனைவி மட்டுமல்லாமல் இரண்டு மகன்களையும், இரண்டு மகள்களையும் விட்டுச் சென்றுள்ளார்கள். அல்லாஹ் அவர்களையும் ஜமாஅத் மற்றும் கிலாஃபத்துடன் உறுதியான தொடர்பு வைக்கச் செய்வானாக. மேலும் மர்ஹூமுடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக.

நான் கூறியதுபோன்று ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு ஜனாஸா தொழுகைகளை தொழ வைப்பேன்.

(தமிழில்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்)

......☆......☆......☆......

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad